# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி**
**மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள், மற்றும்,**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**
**அனைத்துப் பிரிவுத்**
**தலைமைகள், கோயம்புத்தூர்**
**மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை கிழக்கு, மேற்கு,**
**தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்**
**சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்)**
**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை மற்றும் நீலகிரி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 100021 / 2006 / எம்சி. 8 நாள் 22.12.2006**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - டிசம்பர் 2006-ல் நடைபெறுவது – தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வரும் 29.12.2006 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (Agenda of the Ordinary Council Meeting) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**இணைப்பு : கூட்டக்குறிப்பு**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மைநகல் உத்திரவின்படி/**

**மாமன்ற செயலாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

## 29-12-2006-ம் தேதி மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி<br>இ) நேரமில்லா நேரம் | |
| வ.எண். | ஈ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு சர்வே எண். 383/2 383/3, 383/4 – 2.35 ஏக்கர் நிலம் - தொழிற்சாலைப்பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றி – பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 2. | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு சர்வே எண். 413/2&414/2, சிங்காநல்லூர் கிராமம் - 205 ஏக்கர் நிலம் - தொழிற்சாலைப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றி – பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 3 | மேற்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு ந.அ.எண்.11/7/2, பி தரை மற்றும் மூன்று தளம் அடுக்குமாடி கட்டிடம் - தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றி – பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 4 | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு இராமநாதபுரம் கிராமம் 9.51 ஏக்கர் நிலம் - தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றி – பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 5 | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு க.ச.எண். 194/1& 200/1, - 1.15 ஏக்கர் நிலம் - தொழிற்சாலைப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றுதல் - 3.52 ஏக்கர் நில உபயோக மாற்றம் செய்தல் மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 6 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.12 – க.ச.எண்.132,134,137ஏ/1 – 5.92 ஏக்கர் நிலம் பூங்கா மற்றும் விளையாடும் இடம் பகுதியிலிருந்து நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்தல் தொடர்பாக. |
| 7. | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு கிருஷ்ணராயபுரம் கிராமம் சர்வே எண்கள். 1066/2, 1066/4, 1066/4ஏ – சௌரிபாளையம் கிராமம் சர்வே எண். 533/1 மற்றும் 534/1 – 4.11 ஏக்கர் நிலம் - தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து வணிகம் மற்றும் பொது கட்டிட உபயோகத்திற்கு மாற்றி – பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 8. | வடக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.488/5 பி 488/5 சி 489/1 – 2. 82 ஏக்கர் மனையிடம் - பலஅடுக்கு மாடி கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 9 | தெற்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - க.ச.எண் 509/02 முதலியவை 13 ஏக்கர் 28813 சதுர அடி – தொழிற்சாலை பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் தொடர்பாக. |
| 10 | தெற்கு மண்டலம் - வார்டு எண்.54 – க.ச.எண். 353/2 முதலியன – 21.64 ஏக்கர் நிலம் - விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்புகுடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து அறிவித்தல் தொடர்பாக. |
| 11 | தெந்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - வார்டு எண் 25 – நகரளவு வார்டு எண்.1 பிளாக் எண்.15, நகரளவு எண்.949/9 –பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக பிரகடணப்படுத்துதல் தொடர்பாக. |
| 12 | JNNURM –பாதாள சாக்கடைத் திட்டம் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - திட்ட ஆலோசகர்கள் நியமித்தல் - தொடர்பாக. |
| 13 | JNNURM – மழைநீர் வடிகால் கட்டுதல், இயற்கை வடிகால்கள் தூர் வாருதல் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - திட்ட ஆலோசகர்கள் நியமித்தல் தொடர்பாக. |
| 14 | JNNURM – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - திட்ட ஆலோசகர்கள் நியமித்தல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 15 | **JNNURM** – ஏழ்மை மக்களுக்கான அடிப்படை சேவைகளை மேம்படுத்துதல் திட்டம் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - திட்ட ஆலோசகர்கள் நியமித்தல் - தொடர்பாக. |
| 16 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.17 – வரதராஜுலு நகர் - மழை நீர் சாக்கடை கட்ட நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 17 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.17 – வரதராஜுலு நகர் - சாலை அமைத்தல் பணி - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 18 | பொதுப்பிரிவு - மாநகராட்சி கட்டிடங்கள் - பாதுகாவலர்கள் நியமித்தல் தி/ள்.ஏ.வி.ஐ.பி. செக்யூரிட்டி சர்வீஸ் - ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்தல் - தி/ள்.சென்ட்ரல் இன்வெஸ்டிகேசன் மற்றும் செக்யூரிட்டி சர்வீஸின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் தொடர்பாக. |
| 19 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.70 – பாலன் நகர் - மழை நீர் வடிகால் கட்டும் பணி - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 20 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.66 – பாலன் நகர் - மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 21 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண். 14 – கிருஷ்ணா காலனி திருச்சி சாலை, ஐயர் ஆஸ்பத்திரி சாலை - மழை நீர் வடிகால் கட்டும் பணி - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண். 14 – கோத்தாரி லே அவுட், பி.ஆர் நகர் - மழை நீர் வடிகால் கட்டும் பணி - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண். 64க்குட்பட்ட பகுதிகள் மற்றும் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மார்க்கெட்டிற்குள் கூடுதல் வடிகால் அமைத்தல் பணி - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 24 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண். 14 – கோத்தாரி லே அவுட் அருகில் சங்கனூர் பள்ளத்தில் தடுப்புச்சுவர் கட்டுதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - பிரதான அலுவலகம் - மாமன்ற கூட்டக்கட்டிடம் கட்டுதல் ரூ.97இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி நிர்வாக ஆணையாளருக்கு பிரேரணை அனுப்புதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 26 | நகரமைப்பு பிரிவு - அவினாசி சாலை – சத்தியமங்கலம் சாலை மேட்டுப்பாளையம் சாலை – திட்டசாலை அமைத்தல் - நிலையில் உள்ள சாலையினை விஸ்தரித்தல் - தொடர்பாக. |
| 27 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - எம்.எம்.வி சேசிஸ்களில் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகள் வடிவமைத்தல் - மூன்று ஆண்டுகளுக்குபராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 28 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - எம்.எம்.வி சேசிஸ்களில் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகள் வடிவமைத்தல் - மூன்று ஆண்டுகளுக்குபராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - எம்.எம்.வி சேசிஸ்களில் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகள் வடிவமைத்தல் - மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 30 | **JNNURM** – நீர்நிலைகளை பழைய நிலைக்கு கொணருதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைத்தல் - திட்ட ஆலோசகர்களாக தி/ள்.ஆ.ஃப்ரோ (ஆக்சன் பார் புட் புரொடக்சன்-க்கு) உத்திரவு வழங்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 31 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 29 வது வார்டு சின்னசாமி ரோடு ஸ்ரீ அய்யப்பன் கோவில் முன்புறம் - மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடம் - தற்காலிக கடைகள் நடத்த ஏலம் நடத்தி உத்திரவு வழங்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |

| | |
|---|---|
| 32 | பொறியியல் பிரிவு - திருத்தப்பட்ட கட்டுமானப்பொருட்களின் விலைப்பட்டியல் - மாமன்றத்தின் பதிவிற்கும், பார்வைக்கும் வைத்தல் - அமுல் படுத்த அனுமதி கோருதல் தொடாபாக. |
| 33 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு 16 – திருமகள் நகர் அருகில் உள்ள பள்ளம் - தடுப்புச்சுவர் கட்டுதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 34 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு 43 – கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 35 | பொறியியல் பிரிவு - 17-அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் பெறுதல் தொடர்பாக. |
| 36 | பொறியியல் பிரிவு - 3-அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் பெறுதல் தொடர்பாக. |
| 37 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு 32 – டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலை – நடைபாதை அபிவிருத்தி மற்றும் மராமத்து பணி – மதிப்பீடு ரூ.16 லட்சம் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 38 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு 3 – தண்ணீர் பந்தல் சாலை – தார் தளம் புதுப்பித்தல் பணி – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| இணைப்பு | |
| 39 | பொறியியல் பிரிவு - 26-அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் பெறுதல் தொடர்பாக. |
| 40 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் - அனுமதிக்கப்பட்டது – மாநகராட்சி ஆய்வு மாளிகை அமைந்துள்ள இடத்தில் கட்டுதல் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 41 | நகரமைப்பு பிரிவு - மத்திய சிறைச்சாலை – வெள்ளலூருக்கு மாற்றம் செய்தல் - இடத்தை மாநகராட்சிக்கு ஒப்படைத்தல் - உள் விளையாட்டு அரங்கம் முதலிய வசதிகளை செயல்படுத்துதல் - மாமன்ற முடிவிற்காக. |
| 42 | நகரமைப்பு பிரிவு - நவீன பஸ்செல்ட்டர்கள் - அமைத்து பராமரிக்க – நன்கொடையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டது – வருடாந்திர உரிமக்கட்டணம் மற்றும் விண்ணப்பக்கட்டணம் ரத்து செய்வது – தொடர்பாக. |
| 43 | பொறியியல் பிரிவு - வார்டு எண். 70 – தரணி நகர் - மழை நீர் வடிகால் கட்டும் பணி ரூ.22.5 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | பொறியியல் பிரிவு - பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டம் (JNNURM) – நிதி ஆதாரத்தின் கீழ் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டது – செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிறுவனம் தேர்வு செய்தல் - தொடர்பாக. |
| 45 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - மாநகராட்சி பிரதான அலுவலகம் - லிப்ட் மற்றும் மாடி ப்படி கட்டுதல் - முதல் தளத்தில் இணைப்பு நடைபாதை அமைத்தல் பணி – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |

## திருக்குறள்

**சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை**

**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.**

**(குறள் - 645)**

### விளக்கம்

**இந்த சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.**

**- திருவள்ளுவர்.**

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண் . 1</u>**

திரு. பி.விஜயகுமாா், கோவை – 18 என்பவா் தனது 22-8-2006 ஆம் நாளைய விண்ணப்பத்தில் உப்பிலிபாளையம் கிராமம் சா்வே எண்கள் 383/2, 383/3, 383/4, இல் உள்ள 2.35 ஏக்கா் நிலத்தை தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும் பின்னா் அந்நிலத்தை பலமாடி கட்டும் பகுதியாக அறிவிக்கக் கோரியுள்ளாா். சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தி த் திட்டம் 2 - இல் ஷை நிலம் தொழிற்சாலைப் பகுதியாக உள்ளது. தற்சமயம் தொழிற்சாலை ஏதுமின்றி உபயோகமற்ற நிலையில் உள்ளது. பல்வகை நில உபயோகங்களாக இப்பகுதி அபிவிருத்தியடைந்து வருகிறது. எனவே இந்நிலத்தை தொழிற்சாலைப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றவும், பல மாடிக் கட்டிடம் கட்டத் தேவையான விதிகளையும் இந்நிலம் நிறைவு செய்வதால் இந்நிலத்தை தமிழ்நாடு பலமாடி மற்றும் பொதுக் கட்டிட விதிகள், 1973 விதி 4 இன் கீழ் பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக பிரகடனப்படுத்த மாமன்றத்திற்கும், நகா் ஊரமைப்புத் துறைக்கும் பரிந்துரை செய்யலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் , குழு தனது தீா்மான எண்.131 நாள் 28-08-2006 –ல் ‘‘மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது’’ என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின்ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். எண். 10640/06H1 (E)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 201 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண் -2</u>**

மனுதாரா் திரு. இராஜேந்திர மேத்தா மற்றும் 6 நபா்கள் தமது 24-4-2006 ஆம் நாளைய மனுவில சா்வே எண்கள் 413/2 & 414/2 சிங்காநல்லூா் கிராமம் பகுதியில் உள்ள 2.05 ஏக்கா் நிலத்தில் பல அடுக்கு மாடிக் குடியிருப்பு கட்ட ஏதுவாக ஷை இடத்தை பல அடுக்கு மாடி குடியிருப்பு கட்டும் பகுதியாக அறிவிக்க கோரியுள்ளனா். திருச்சி சாலையை அணுகுசாலையாகக் கொண்டு இடம் உள்ளது. உத்தேச கட்டிடத்தின் உயரம் 30 மீட்டருக்குள் அமையுமாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் குடியிருப்பு உட்பட பல்வகை நில உபயோகங்கள் உபயோகத்தில் உள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டிடம் கட்ட தகுதியான இடம். எனவே சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் .37 ல் உள்ள ஷை நிலத்தை தமிழ்நாடு பலமாடி மற்றும் பொதுக் கட்டிட விதிகள் ,1973 விதி 4 இன் கீழ் பலமாடி கட்டும் பகுதியாக அறிவிக்க மாமன்றத்திற்கும், நகா் ஊரமைப்புத் துறைக்கும் பரிந்துரை செய்யலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப் பட்டதில், குழு தனது தீா்மான எண்.133 நாள் 28-08-2006 –ல் ‘‘மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது’’ என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். எண். 10642/06H1 (E)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 202 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 3</u>**

மனுதாரா் திரு. சி.தனசேகா் அவா்கள் தமது 25-07-2006ந் தேதிய மனுவில் கோயம்புத்துா் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சங்கனூா் கிராமம் மேட்டுப்பாளையம் ரோடு அருகில் ந.அ.எண்.11/7/2 பி –ல் ஸ்டில்ட் தளம் 3415.43 சதுர அடி தரை தளம் 3414.43 முதல் தளம் 3414.43 சதுர அடி இரண்டாம் தளம் 3415.43 சதுர அடி மூன்றாம் தளம் 3415.43 சதுர அடி பரப்பளவில் 12 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி பல குடியிருப்புக் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி கோரி பிரேரணைகள் சமா்ப்பித்துள்ளாா்.

மேற்படி மனையிடம் ரெயில்வே எல்லையை ஒட்டி (8.9m) உள்ளபடியில் ரெயில்வே துறையினரிடமிருந்து எண்.J.W./280/NOC/CTR-CBE/802(a)/05-ல் கோட்ட ரெயில்வே மேலாளா் / ஒா்க்ஸ் / பாலக்காடு அவா்களிடம் இருந்து மேற்குறிப்பிட்ட மனையிடத்தில் பல குடியிருப்புக் கட்டிடம் கட்ட ஆட்சேபணையின்மை சான்று No objection Certificate பெற்று மனுதாரா் சமா்ப்பித்து உள்ளாா்.

உதவி பொறியாளா் 2 வது பிரிவு திட்டம் அவா்கள் தமது 11-07-06 ந் தேதிய குறிப்பில் மேற்குறிப்பிட்ட மனையிடம் தொழிற்பகுதியில் அமைகிறபடியால் அதனை குடியிருப்பு பகுதியாக நில உபயோகம் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்துள்ளாா்.

எனவே, மேற்குறிப்பிட்ட அடுக்குமாடி பல குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி கோரும் சங்கனூா் கிராமம் மேட்டுப்பாளையம் ரோடு அருகில் ந.அ.எண்.11/7/2பி–ல் மனையிடத்தை தொழிற்பகுதி நில உபயோகத்தில் இருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து உத்திரவு பிறப்பிக்குமாறு கோவை உள்ளூா் திட்டக் குழுமம் வாயிலாக நகா் ஊரமைப்பு மற்றும் இயக்குநா் அவா்களை கேட்டுக் கொள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவிற்கு பொருள் சமா்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மான எண்.139 நாள் 28-08-2006 –ல் ''மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது'' என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். எண். 7136/2005/H1 (W)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 203 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 4</u>**

நேஷனல் டெக்ஸ்டைல் காா்ப்பரேஷன் என்கிற நிறுவனத்தின் பைனான்ஸ் இயக்குநா் தனது 21-8-2006 ஆம் நாளைய விண்ணப்பத்தில் இராமநாதபுரம் கிராமம் சா்வே எண்கள் 1810/1,1811/ பகுதி 1812,1813/1,1816/1,1817/1,1871/1,1872/1,1817/1 இல் உள்ள 9.51 விஸ்தீரணமுள்ள நிலத்தை தொழிற்சாலைப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும், பின்னா் அந்நிலத்தை பல அடுக்கு மாடிக் குடியிருப்பு கட்டுமிடமாக பிரகடனபடுத்தவும் அனுமதி கோரியுள்ளனா். அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டத்தில் இப்பகுதி தொழிற் சாலைப் பகுதியாக உள்ளது. ஏற்கனவே இவ்விடத்தில் பங்கஜா மில் என்கிற பெயரில் டெக்ஸ்டைல் தொழிற்சாலை இருந்தது. தற்சமயம் காலியிடமாக உள்ளது. இப்பகுதி கலப்பு நில உபயோகப் பகுதியாக அபிவிருத்தியடைந்து வருகிறது. நில உபயோக மாற்றம் மற்றும் பல மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக ஷை நிலத்தை அறிவிக்க சம்பந்தப்பட்ட விதிகளை நிறைவு செய்யும் வகையில் உத்தேசம் உள்ளது. எனவே மேற்கண்ட நிலத்தை தொழிற்சாலைப் பகுதியில் இருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும், ஷை நிலத்தை அடுக்கு மாடி மற்றும் பொதுக் கட்டிட விதிகள், 1973 – ன் கீழ் பல மாடிக் கட்டிடம் பகுதியாக அறிவிக்கவும் மனுதாரரின் கோரிக்கையை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில், குழு தனது தீா்மான எண்.132 நாள் 28-08-2006-ல் ''மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது'' என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம்.** **எண். 10641/06H1 (E)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 204 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 5</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உப்பிலிபாளையம் கிராமம் க.ச.எண். 194/1 – 3.52ஏ க.ச. எண். 200/1 – 1.15 ஏக்கர் - நிலப்பரப்பு, தொழிற்சாலை பகுதியில் இருந்து குடியிருப்பு பகுதியாக 3.52 ஏக்கர் நில உபயோக மாற்றம் செய்தல், தொழிற்சாலை பகுதியில் இருந்து வணிக பகுதியாக 1.15 ஏக்கர் நில உபயோக மாற்றம் செய்தல் மொத்தம் 4.67 ஏக்கர் பலமாடி கட்டிட பகுதியாக பிரகடனம் செய்தல் - மனுதாரர் பி. ரங்கசாமி நாயுடு கேட்டில் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட், 200A திருச்சி சாலை, சிங்காநல்லூர் அவர்களின் விண்ணப்பம் நாள் 07-08-2006 அனுமதி கோருதல் - தொடர்பாக.

மனுதாரர் பி.ரங்கசாமி நாயுடு கேட்டில் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட், 200A திருச்சி சாலை, சிங்காநல்லூர் அவர்கள் தமக்கு சொந்தமான உப்பிலிபாளையம் கிராமம், க.ச.எண். 200/1 ல் 1.15 ஏக்கர் நிலப்பரப்பினை தொழிற்சாலை பகுதியில் Controlled Industrial Area இருந்து வணிக உபயோகத்திறகு நில உபயோக மாற்றம் மற்றும் பலமாடி வணிக கட்டிட பிரதேசமாகவும், உப்பிலிபாளையம் கிராமம் க.ச.எண் 194/1 – 3.52 ஏக்கர் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை பகுதியில் இருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் மற்றும் பலமாடி குடியிருப்பு கட்டிட பிரதேசமாகவும் பிரகடனம் செய்து தரும்படி அரசுச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களுக்கு ஆணையர் கோவை மாநகராட்சி மூலம் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் இடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.10 தொழிற்சாலை பகுதியில் அமைகிறது. மனுதாரர் இடத்தில் மேற்கு எல்லையினை ஒட்டி 80’0’’ அகல திட்டச் சாலை திருச்சி சாலையில் இருந்து வடக்கு நோக்கி செல்கிறது. மனுதாரர் ரூ.100/-முத்திரை தாளில் திட்டச்சாலை நிலப்பரப்பினை மாநகராட்சிக்குத் தானமாக தருவதாக உறுதிமொழி பத்திரம் மட்டும் சமர்ப்பித்துள்ளார். திட்டச் சாலைக்குரிய நிலப்பரப்பினை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களுக்கு இலவசமாக தானப் பத்திரம் செய்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும். வருவாய் வட்டாட்சியர் தடையின்மை சான்றிதழ் தொடர்பாக மனுதாரர் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றிதழ் பெற்று சமர்ப்பித்துள்ளார். கிராம நிர்வாக அலுவலர் 24-8-2006 சான்றிதழில் மனுதாரரின் 4.67 ஏக்கர் நிலம் வட்டாட்சியர் தடையின்மை சான்றிதழ் கோரி கோப்பு எண்.12565/06/ ஆ10 நாள் 17-08-2006 ல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய காலியிட வரி தொடர்பாக வருவாய் பிரிவு தடையின்மை சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

குடிநீர் பகிர்மானம் மற்றும் சாக்கடைநீர் வெளியேற்றம் தொடர்பாக பொறியாளர்கள் குறிப்பு பெறப்பட வேண்டும். முன்பக்கத்தில் கண்டுள்ள ஆவணங்கள் மற்றும் 80’ திட்டச்சாலை பகுதி நிலப்பரப்பிற்குரிய தானப் பத்திரம் ஆகியவை பெறப்பட்டவுடன் மனுதாரரின் உத்தேச நில உபயோக மாற்றம் மற்றும் பலமாடி குடியிருப்பு, மற்றும் வணிக கட்டிட பிரதேச பிரகடனம் கோரும் விண்ணப்பத்தினை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்காண் மனுதாரர் விண்ணப்பம் தொடர்பான முடிவு செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.140 நாள் 28-08-2006-ல் ‘‘ மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது’’ என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம்.** **எண். 10063/06/H1**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 205 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**பொருள் எண். 6**

மனுதாரா் திரு. ஏ. கருப்புசாமி என்பவா் 16-6-2006 ம் தேதிய விண்ணப்பத்தில், கோவை மாநகராட்சி இராமநாதபுரம் கிராமம், சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 48, க.ச.எண். 132, 134, 137A/1 பகுதியில் 5.92 ஏக்கா் நிலத்தினை ''பூங்கா மற்றும் விளையாடுமிடம்'' பகுதியில் இருந்து நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரரின் மனையிடம் மாநகராட்சி வாா்டு எண் 12லும் சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.48லும் அமைகிறது. புல எண்கள். 132 மற்றும் 134 ஆகியவை முழுமைத் திட்டத்தில் விடுபட்டுள்ளது. புல எண்.137A முழுமைத்திட்டத்தில் குடியிருப்புப் பகுதியாக உள்ளது. மனையிடத்திற்கு தற்போது அணுகுசாலை ஏதும் அமையவில்லை. மனையிடத்தினை அபிவிருத்தி செய்யும் போது புல எண்.135A மற்றும் 137A -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள A1-A,80'0'' அகல திட்ட சாலையை அபிவிருத்தி செய்து அச்சாலையினை மாநகராட்சிக்கு ஒப்படை செய்வதாக மனுதாரா் தெரிவித்துள்ளாா்.

தற்போது மேற்படி நிலத்தில் தென்னை மரங்கள் மற்றும் இதர மரங்கள் உள்ளன. உத்தேச நிலத்திற்கும், அணுகுபாதைக்கும் இடையில் வாய்க்கால் உள்ளது. மேற்படி இடத்திற்கு எதிரில் குடியிருப்பு காலனிகள் வளா்ச்சி அடைந்து உள்ளது. நிலத்திற்கு பின்புறத்தில் மேலும் ஒரு விளையாட்டு மைதான உத்தேச திட்டம் உள்ளது.

எனவே மேற்படி இராமநாதபுரம் கிராமம் க.ச.எண்.132, 134, 137A/1 பகுதியில் 5.92 ஏக்கா் நிலத்தினை ''பூங்கா மற்றும் விளையாடும்'' பகுதி உபயோகத்தில் இருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து உத்திரவு பிறப்பிக்குமாறு கோவை உள்ளூா் திட்டக் குழுமம் வாரியாக நகா் ஊரமைப்பு இயக்குநா் சென்னை அவா்களுக்கு மாநகர மன்றத்தின் ஒப்புதலுடன் அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மான எண்.138 நாள். 28-08-2006-ல் ''மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது'' என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். எண். 7227/06/(தெ)**

**மாநகர மன்ற தீா்மானம் எண். 206 நாள்.29.12.2006**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**பொருள் எண். 7**

மனுதாரா் வி.எஸ்.சுரேஷ் சென்னை என்பவா் தனது 24-07-2006ஆம் நாளைய விண்ணப்பத்தில் கிருஷ்ணராயபுரம் கிராமம் சா்வே எண்கள் 1066/2, 1066/4, 1066/4A மற்றும் சௌரிபாளையம் கிராமம் சா்வே எண்கள் 533/1 & 534/1 இல் உள்ள 4.11 ஏக்கா் நிலத்தை தொழிற்சாலை நில உபயோகத்தில் இருந்து வணிகம் மற்றும் பொதுக் கட்டிட உபயோக நிலமாக மாற்றம் செய்யவும், பின்னா் அந்நிலத்தை பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் கோரியுள்ளாா்.

கோயம்புத்தூா் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.16 இல் மேற்படி இடம் தொழிற்சங்க பகுதியில் உள்ளது. வட்டாச்சியரின் தடையின்மைச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. அவினாசி சாலையை அணுகு சாலையாகக் கொண்ட இப்பகுதி பெரும்பாலும் கலப்பு நில உபயோகமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. தொழிற்சாலை உபயோகத்தில் உள்ள இந்த இடத்தில் தொழிற்சாலை வர வாய்ப்பில்லை. வணிக உபயோகமாக வளா்ச்சி அடைய இந்நிலம் உகந்த இடமாக உள்ளது. பல மாடி கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ற நிலையில் சம்பந்தப்பட்ட விதிகளை நிறைவு செய்யும் வகையில் உத்தேசம் உள்ளது. எனவே மனுதாரரின் கோரிக்கையை மாமன்றத்திற்கும், நகா் ஊரமைப்பு துறைக்கும் மனுதாரா் கோரும் நில உபயோக மாற்றம் செய்யவும், தமிழ்நாடு பலமாடி மற்றும் பொதுக் கட்டிட

விதிகள் 1973 விதி 4- இன் கீழ் மேற்படி நிலத்தை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டதில் , நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.141 நாள் 28-08-2006-ல் ‘‘மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது’’ என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம்.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 207 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 8</u>**

மனுதாரர் திரு. ஆர்.எம்.சுப்பையா மக்னூர் ஹாஸ்பிடாலிட்டி (பி) லிட் நிறுவனத்தினர், கோவை மாநகராட்சி, விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.488/5B, 488/5C,489/1 பாகத்தில் அமைந்துள்ள 2.82 ஏக்கர் பரப்பளவு மனையிடத்தினை பல அடுக்குமாடி கட்டும் பகுதியாக மாற்றம் செய்து தரக்கோரி நகர் ஊரமைப்பு, இயக்குநர், சென்னை அவர்களுக்கு மாநகராட்சி மூலம் விண்ணப்பம் செய்துள்ளனர்.

மேற்படி மனையிடம் விளாங்குறிச்சி விரிவு அபிவிருத்தி திட்ட எண். 9 ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டதின்படி இப்பகுதி தொழிற்சாலை பகுதியாக அமைகிறது. இம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக நிலையில் உள்ள அவினாசி சாலை அமைகிறது. மேலும், இத்திட்டத்தின் படி இம்மனையிடத்திற்கு கிழபுறத்தில் திட்ட சாலை ‘D-D’ என பெயரிடப்பட்டு 30 அடி அகலத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மனையிலிருந்து கிழபுறத்தில் நிலையில் உள்ள சாலை 20 அடி அகலம் கொண்டதாக அமைகிறது. இத்திட்டத்தின்படி திட்டசாலைக்காக சாலை விஸ்தரிப்புக்கு, இம்மனையிடத்தில் 5 அடி அகலத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும் இம்மனையிடத்தில் உயர் மின் அழுத்த கம்பிகள் மற்றும் குறைந்த மின் அழுத்த கம்பிகள் செல்லுகின்றன. இம்மனையிடத்தினை ஒட்டி நீரோடைகள் ஏதும் செல்வதில்லை.

எனவே, மேற்படி மனையிடத்தினை பல அடுக்குமாடி கொண்ட கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு கோவை உள்ளூர் திட்ட குழுமம் வாயிலாக மாநகர மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.135 நாள் 28-08-2006-ல் ‘‘ மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது’’ என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம்.** **எண். 7496/06 H2 (N)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 208 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 9</u>**

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 42 வது வார்டு உட்பட்ட நகரளவு வார்டு எண்.3 பிளாக் 8, நகரளவு எண் 509/2, 509/3, 509/4, 511, 512 ஆகிய நிலப்பரப்பினை இதன் உரிமையாளரான பாஸ்யம் இன்வஸ்மெண்ட நிறுவனத்தினா் மேற்படி இடத்தின் பரப்பு 13 ஏக்கா் 28813 சதுரடி இடத்தினை முழுமை திட்டத்தின்படி தொழிற்சாலை பகுதியாக உள்ளதால், கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும், மேலும் நகரளவு எண்.3/509/2, 3/509/4, 3/511,3/512,3/508 எ, 3/511,3/508/2சி , 3/508/1, 3/509/3 –ன் பரப்பு 16 ஏக்கா் 34,733 சதரடிகள் கொண்ட இடத்தில் பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளாா்.

கோயமுத்தூா் நகரமைப்பு திட்டம் எண்10லும் தொழிற்சாலை பகுதியாக அமைந்துள்ள நகரளவு எண். 509/2, 509/3, 509/4, 511, 512 ஆகிய பரப்பு 13 ஏக்கா் 28813 சதுரடிகள் இடத்தினை கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்யவும், மேலும் நகரளவு எண்கள் 509/2, 509/3, 509/4, 511, 512 ஆகிய இடத்தினை பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்ய அனுமதி வழங்குவது குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மான எண்.137 நாள் 28-08-2006-ல் ‘‘மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது’’ என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம்.**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 209 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண். 10</u>**

கோயம்புத்தூா் மாநகராட்சி – தெற்கு மண்டலம் வாா்டு எண்.54 க்குட்பட்ட க.ச.எண் 353/2, 353/1எ1, 354, 355, 336,337/2எ, 358,359,360,361/2,361/3,361/4எ, கோயம்புத்தூா் கிராமம் - ன் மொத்த பரப்பு 21.64 ஏக்கா் நிலப்பரப்பினை இதன் உரிமையாளா் பாஸ்யம் இன்வெஸட்மெண்ட் நிறுவனத்தினா் முழுமை திட்ட உபயோகத்தின் படி விவசாய உபயோகம் உள்ள மேற்படி நிலத்தினை கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய கேட்டுள்ளனா்.

மனுதாராின் மனையிடம் கோயமுத்தூா் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்-1லும் முழுமை திட்டத்தின்படி விவசாய பகுதியிலும் அமைகிறது. எனவே மேற்படி காலை எண்களுக்குாிய 21.64 ஏக்கா் பரப்பளவுள்ள விவசாய பகுதியை கலப்பு குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும், அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மான எண்.136 நாள் 28-08-2006-ல் ‘‘மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது’’ என்று தீா்மானம நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். எண். 9175/2006/H 1(தெ)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 210 நாள்.29.12.2006</u>**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

கடந்த 14-09-2006 ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**பொருள் எண். 11**

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் வாா்டு எண் 25 நகரளவு வாா்டு எண்1 பிளாக் எண். 15 நகரளவு எண் 949/9 பந்தைய சாலை ( ரேஸ் கோா்ஸ்) மனையிடத்தில் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கக்கோரி தி இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் தாஜ் குருப்ஸ் நிறுவனத்தினா் கேட்டுக் கொண்டுள்ளனா்.

மேற்படி இடம் கோயம்புத்தூா் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 8-லும் முழுமை திட்டத்தின்படி வணிகபகுதியிலும் அமைகிறது. மனுதாரரின் மனையிடம் 8284.85 சதுர மீட்டா் பரப்பும் ரேஸ் கோா்ஸ் சாலையை ஒட்டியும் அமைந்துள்ளது. பலமாடி கட்டிடம் கட்ட தேவையான விதிகளையும் இந்நிலம் நிறைவு செய்வதால் இந்நிலத்தை தமிழ்நாடு பலமாடி மற்றும் பொது கட்டிட விதிகள் 1973 விதி 4 ன் கீழ் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக பிரகடனப்படுத்த மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமா்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் எண். 4533/2006/H 1(தெ)**

**மாநகர மன்ற தீா்மானம் எண். 211 நாள்.29.12.2006**

**கடந்த மாமன்ற காலத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது புதியதாக பதவி ஏற்றுக்கொண்டுள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருளினை அனுப்பி, குழுவின் பரிந்துரையின் பேரில் மீண்டும் மன்றத்திற்கு சமா்ப்பிக்க தீா்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 12**

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகா்களை நியமிக்க நகராட்சி நிா்வாக ஆணையாளா் உத்திரவிற்கிணங்க திட்ட கேட்பு அறிக்கை (R.P.F) கோரப்பட்டது. அவ்வாறு கோரப்பட்டதில் 10-11-2006 தேதியில் கீழ்கண்ட ஆலோசகா்களிடமிருந்து உத்தேச திட்ட அறிக்கைகள் தொழில் நுட்ப கருத்துரை அடங்கிய உறைகள் (Technical Proposal) மற்றும் (Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. தி/ள். முகேஷ் அண்டு அசோசியேட்ஸ், சேலம்.
2. தி/ள். கம்யூனிடி கன்சல்டிங் இந்தியா, சென்னை.
3. தி/ள். ஏ.எஸ்.கே. கன்சல்டன்ஸி சா்வீஸஸ், (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சென்னை.
4. தி/ள். வாட்டா் அண்டு பவா் கன்சல்டன்ஸி சா்வீஸஸ் பெங்களூா்.
5. தி/ள்.. கன்சல்டிங் இஞ்சினியரிங் சா்வீஸஸ், சென்னை.
6. தி/ள். ஜி.இ.எம். கன்சல்டன்ஸி. சென்னை.
7. தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி ஃபாா் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் .ஹைதராபாத்.
8. தி/ள். டி.எச்.பி. இந்தியா புதுடெல்லி.
9. தி/ள். எஸ்.டி.யு.பி. கன்சல்டன்ஸி. சென்னை.
10. தி/ள். ராம்கி இண்பரா, காா்கான்.

அவ்வாறு பெறப்பட்ட 10 அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய இரண்டு ஆலோசகா்கள் தொழில் நுட்ப ஆய்வுக் குழுவால் விலைப்புள்ளி அடங்கிய உறைகள் (Financial Bid) திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி பாா் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் ஹைதராபாத்
2. தி/ள். எஸ்.டி.யு.பி. கன்சல்டன்ஸி. சென்னை.

மேற்கண்ட ஆலோசகா்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி பாா் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் .ஹைதராபாத் (M/s. N.C.P.E. Hyderabad) ரூ.1,35,59,000/-க்கு குறிப்பிட்டுள்ளனா். இந்நிறுவனத்தினரை 23-11-2006 அன்று விலைப்புள்ளியை குறைத்து தரக் கோரியதில் இந்நிறுவனம் ரூ.1,35,59,000/-லிருந்து ரூ.1,33,00,000/-க்கு விலைப் புள்ளியை குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளனா் (Negotiation) சேவை வரியாக 12.24 சதவிகிதம் ரூ.16,27,920/- ஆக மொத்தம் ரூ.1,49,27,920/-ஆகும்.

எனவே, தி/ள். நேசனல் கன்சல்டன்ஸி ∴பார் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் ஹைதராபாத் (M/s. N.C.P.E. Hyderabad) அவர்களை ரூ..1,49,27,920/-க்கு இப் பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே, மேற்படி பணியை மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர், தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06-11-2006 – ம் தேதிய கூட்டத்தில் மேற்படி திட்டப்பணிகளை விரைந்து செய்து முடிக்கவும் நடப்பு ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கைகள் 31-12-2006 க்குள் மத்திய அரசுக்கு சென்று அடையும் வண்ணம் உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளார்கள். ஏற்கனவே இத்திட்டத்தனை மன்றம் தனது தீர்மான எண் 114, நாள் 29-08-2005ல் ஒப்புதல் அளித்துள்ளதால், அவசர அவசியம் கருதி மாமன்றம் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க (DPR) தி/ள் நேசனல் கன்சல்டன்ஸி ∴ார் பிளானிங் அண்டு இஞ்சினியரிங் ஹைதராபாத் (M/s. N.C.P.E. Hyderabad) அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டதற்கும், இச்செலவினத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். இது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண். 12069/2006/எம்.டி.**3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 212 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசு அனுமதித்துள்ளபடி திட்ட அறிக்கையினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.13</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல், இயற்கை வடிகால்கள் தூர் வாருதல் (சங்கனூர் பள்ளம் உட்பட ) திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகர்களை நியமிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் உத்திரவிற்கிணங்க திட்ட கேட்பு அறிக்கை (R.P.F) கோரப்பட்டது. அவ்வாறு கோரப்பட்டதில் 3-11-2006 தேதியில் கீழ்கண்ட ஆலோசகர்களிடமிருந்து உத்தேச திட்ட அறிக்கைகள் தொழில் நுட்ப கருத்துரை அடங்கிய உறைகள் (Technical Porposal) மற்றும் (Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. தி/ள். மோட் மேக் டொனால்டு பிரைவேட் லிமிடெட், சென்னை..
2. தி/ள்.ஐடெக் அண்டு மகேந்திரா ஏக்ரஸ், சென்னை
3. தி/ள். ராம்கி இன்ப்ரா, புதுடெல்லி.
4. தி/ள். வாட்டர் அண்டு பவர் கன்சல்டன்ஸி சர்வீஸஸ் பெங்களூர்.
5. தி/ள்.. கன்சல்டிங் இஞ்சினியரிங் சர்வீஸஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை.
6. தி/ள். முகேஷ் அண்டு அசோசியேட்ஸ், சேலம்

அவ்வாறு பெறப்பட்ட 6 அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய இரண்டு ஆலோசகர்கள் தொழில் நுட்ப ஆய்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு 22-11-2006 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறைகள் (Financial Bid) திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. தி/ள். மோட் மேக் டொனால்டு பிரைவேட் லிமிடெட், சென்னை..
2. தி/ள்.. கன்சல்டிங் இஞ்சினியரிங் சர்வீஸஸ், சென்னை.

மேற்கண்ட ஆலோசகர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள தி/ள். மோட் மேக் டொனால்டு பிரைவேட் லிமிடெட், சென்னை.(M/s. Mott Mac Donald (P) Ltd. Chennai) ரூ.56,68,050/-க்கு குறிப்பிட்டுள்ளனர். இந்நிறுவனத்தினரை 23-11-2006 அன்று விலைப்புள்ளியை குறைத்து தரக் கோரியதில் இந்நிறுவனம் ரூ.56,68,050/-லிருந்து ரூ56,00,000/-க்கு விலைப் புள்ளியை குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளனர் (Negotiation) சேவை வரியாக 12.24 சதவிகிதம் ரூ.6,85,440/- ஆக மொத்தம் ரூ.62,85,440/- ஆகும்.

எனவே, . தி/ள். மோட் மேக் டொனால்டு பிரைவேட் லிமிடெட், சென்னை, அவா்களை ரூ..62,85,440/- க்கு இப் பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே, மேற்படி பணியை மத்திய அரசின் நகா்ப்புற வளா்ச்சித் துறை இணைச் செயலாளா், தமிழ்நாடு நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை செயலாளா் மற்றும் நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் 06-11-2006 – ம் தேதிய கூட்டத்தில் மேற்படி திட்டப்பணிகளை விரைந்து செய்து முடிக்கவும் நடப்பு ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உடன் ஆலோசகா்களை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கைகள் 31-12-2006 க்குள் மத்திய அரசுக்கு சென்று அடையும் வண்ணம் உடன் ஆலோசகா்களை நியமனம் செய்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளாா்கள். ஏற்கனவே இத்திட்டத்தனை மன்றம் தனது தீா்மான எண் 114, நாள் 29-08-2005ல் ஒப்புதல் அளித்துள்ளதால், அவசர அவசியம் கருதி மாமன்றம் அனுமதியை எதிா்நோக்கி வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க (DPR) தி/ள் ٰ.மோட் மேக் டொனால்டு பிரைவேட் லிமிடெட், சென்னை.. அவா்களுக்கு ஒப்படைப்பு செய்ய வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டதற்கும், இச்செலவினத்தினை ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். இது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் எண். 13088/2006/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 213 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசு அனுமதித்துள்ளபடி திட்ட அறிக்கையினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.14</u>**

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகா்களை நியமிக்க நகராட்சி நிா்வாக ஆணையாளா் உத்திரவிற்கிணங்க 09-09-2006-ம் தேதி கோரப்பட்டது. அவ்வாறு கோரப்பட்டதில் 29-09-2006 தேதியில் கீழ்கண்ட ஆலோசகா்களிடமிருந்து உத்தேச திட்ட அறிக்கைகள் தொழில் நுட்ப கருத்துரை அடங்கிய உறைகள் (Technical Proposal) மற்றும் (Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. தி/ள். எக்கோ சேவ் சிஸ்டம் . மும்பை
2. தி/ள். கிரீன் குளோபல் கன்சல்டன்ட்ஸ் கோவை.
3. தி/ள்.. மகேந்திரா ஏக்ரஸ், கன்சல்டிங் இஞ்சினியரிங் லிமிடெட், சென்னை.
4. தி/ள். ராம்கி இன்பரா கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் ஹைதராபாத்
5. தி/ள். இன்பராஸ்ட்ரக்சா்ஸ் புரபசனல் எண்டா்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்.,புதுடெல்லி
6. தி/ள். காா்த்திகேயா ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்.
7. தி/ள். எஸ்.டி.யு.பி. கன்சல்டன்ஸி. சென்னை
8. தி/ள். ஐ.எல்.எப்.எஸ் .கன்சல்டன்ஸ்,சென்னை
9. தி/ள். ஏ.எஸ்.கே. கன்சல்டன்ஸி சா்வீஸஸ்,.
10 தி/ள். நேசனல் பிராடக்ட்விடி கவுன்சில் சென்னை.
11. தி/ள். கம்யூனிட்டி கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட். சென்னை.
12. தி/ள் முகேஷ் அசோசியேட்ஸ் சேலம்.

அவ்வாறு பெறப்பட்ட 12 அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய நான்கு ஆலோசகா்கள் தொழில் நுட்ப ஆய்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு 15-11-2006 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறைகள் (Financial Bid) திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. தி/ள். ஐ.எல்.எப்.எஸ் .கன்சல்டன்ஸ்,சென்னை
2. தி/ள். எஸ்.டி.யு.பி. கன்சல்டன்ஸி. சென்னை
3. தி/ள். இன்பராஸ்ட்ரக்சா்ஸ் பிரபசனல் எண்டா்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்.,புதுடெல்லி
4. தி/ள். நேசனல் பிராடக்ட்விடி கவுன்சில் சென்னை.

மேற்கண்ட ஆலோசகா்களில் குறைந்த விலைப்புள்ளியை தி/ள். இன்பராஸ்ட்ரக்சா்ஸ் புரபசனல் எண்டா்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்., புதுடெல்லி (M/s. Infrastructure Professionals Enterprise (p) Ltd., New Delhi) ரூ.19,91,000/-க்கு குறிப்பிட்டுள்ளனா். இந்நிறுவனத்தினரை 22-11-2006 அன்று விலைப்புள்ளியை குறைத்து தரக்கோரியதில் இந்நிறுவனம். ரூ.19,91,000/- லிருந்து ரூ. 19,50,000/-க்கு விலைப்புள்ளியை குறைத்து தர

இசைவு தெரிவித்துள்ளனர். (Negotiation) சேவை வரியாக 12.24 சதவிகிதம் ரூ.,2,41,800/- ஆக மொத்தம் ரூ.21,91,800/-ஆகும்.

எனவே, தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்., புதுடெல்லி (M/s. Infrastructure Professionals Enterprise (p) Ltd., New Delhi) ரூ.21,91,800/-க்கு இப் பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி பணியை மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணைச் செயலாளர் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06-11-2006 ம் தேதிய கூட்டத்தில் மேற்படி திட்டப் பணிகளை விரைந்து செய்து முடிக்கவும் நடப்பு ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கைகள் 31-12-2006 க்குள் மத்திய அரசுக்கு சென்று அடையும் வண்ணம் உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளார்கள். மேற்படி திட்டத்தினை ஏற்கனவே மன்றம் அனுமதித்துள்ளதால் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க (DPR) . தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்.,புதுடெல்லி அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டதற்கும் இச்செலவினத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். இது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண். 130687/2006/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 214 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசு அனுமதித்துள்ளபடி திட்ட அறிக்கையினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 15</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏழ்மை மக்களுக்கான அடிப்படை சேவைகளை மேம்படுத்துதல் திட்டம் (UBSP) திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகர்களை நியமிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் உத்திரவிற்கிணங்க 16-09-2006-ம் தேதியில் திட்ட கேட்பு அறிக்கை (R.F.P) கோரப்பட்டது. அவ்வாறு கோரப்பட்டதில் 31-10-2006 தேதியில் கீழ்கண்ட உறைகள் (Technical Proposal) மற்றும் (Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. தி/ள். ராம்கி இன்பராஸ்ட்டிரக்சர், கார்கான்.
2. தி/ள். பெடரிக் ரெபரியோ அசோசியேட்ஸ், புதுடெல்லி.
3. தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் பிரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்.,புதுடெல்லி
4. தி/ள். அர்பன் மேனேஜ்மெண்ட் கன்சல்டன்ட்ஸ், அகமதாபாத்.

அவ்வாறு பெறப்பட்ட 4 அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய இரண்டு ஆலோசகர்கள் தொழில் நுட்ப ஆய்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு 15-11-2006 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறைகள்˙. (Financial Bid) திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1. தி/ள். அர்பன் மேனேஜ்மெண்ட் கன்சல்டன்ட்ஸ், அகமதாபாத்.
2. தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்.,புதுடெல்லி

மேற்கண்ட ஆலோசகர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள . தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட். ,புதுடெல்லி (M/s. Infrastructure Professionals Enterprise (p) Ltd., New Delhi) ரூ.1,51,67,000/-க்கு குறிப்பிட்டுள்ளனர். இந்நிறுவனத்தினரை 22-11-2006 அன்று விலைப்புள்ளியை குறைத்து தரக்கோரியதில் இந்நிறுவனம் ரூ.1,51,67,000/-கலிருந்து ரூ.1,46,67,000/-க்கு விலைப்புள்ளியை விலைப்புள்ளியை குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளனர். (Negotiation) சேவை வரியாக 12.24 சதவிகிதம் ரூ.,17,95,241/- ஆக மொத்தம் ரூ.1,64,62,241/-ஆகும்.

எனவே, தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்., புதுடெல்லி (M/s. Infrastructure Professionals Enterprise (p) Ltd., New Delhi) .ரூ.1,64,62,241/- /-க்கு இப் பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி பணியை அரசின் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06-11-2006 தேதிய கூட்டத்தில் மேற்படி திட்டடப் பணிகளை விரைந்து செய்து முடிக்கவும் நடப்பு ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கைகள் 31-12-2006 க்குள் மத்திய அரசுக்கு சென்று அடையும் வண்ணம் உடன் ஆலோசகர்களை நியமனம் செய்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளார்கள். மேற்படி திட்டத்தினை ஏற்கனவே மன்றம் அனுமதித்துள்ளதால் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வரிவான திட்ட அறிக்கை தயாரிக்க (D.P.R) தி/ள். இன்பராஸ்ட்ரக்சர்ஸ் புரபசனல் எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட்., புதுடெல்லி அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டதற்கும், இச்செலவினத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டதிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். இது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண். 13089/2006/எம்.டி.3**

## மாநகர மன்ற தீர்மானம் எண். 215 நாள்.29.12.2006

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மத்திய மாநில அரசு அனுமதித்துள்ளபடி திட்ட அறிக்கையினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 16**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியில் பிரிவு எண். 2- வார்டு எண் 17-ல் உள்ள வரதராஜுலு நகர் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு சமீபத்தில் பெய்த கன மழையால் பகுதியில் மழைநீர் மற்றும் சாக்கடை நீர் தேங்கி நோய் பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதை வார்டு உறுப்பினர் தெரிவித்ததை அடுத்து அப்பகுதியில் மழைநீர் சாக்கடை அமைத்து தருமாறு மனுவின் மூலம் கேட்டுள்ளார்.

எனவே மேற்படி பகுதியல் மழைநீர் சாக்கடை கட்ட ரூ.24,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண். 12141/2006/எம்.டி.2**

## மாநகர மன்ற தீர்மானம் எண். 216 நாள்.29.12.2006

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 2 – வார்டு எண்.17-ல் உள்ள வரதராஜுலு நகர் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு பகுதியில் உள்ள சாலைகள், குண்டும், குழியுமாக இருப்பதால் சாலையில் மழைநீர் தேங்கி நோய் பரவ செய்வதோடு போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. இப்பகுதியில் சாலை வசதி செய்து கொடுக்குமாறு வார்டு உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.24,00,000/- ற்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டும் மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண். 12144/2006/எம்.டி.2**

## மாநகர மன்ற தீர்மானம் எண். 217 நாள்.29.12.2006

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண் -18</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள் மற்றும் குப்பை கிடங்கு ஆகிய இடங்களுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த மெசா்ஸ் ஏவிஜபி செக்யூரிட்டி சா்வீஸ் நிறுவனத்தினா் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்தல் தொடா்பாக.

-----------

இம்மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள் மற்றும் குப்பை கிடங்கு ஆகிய இடங்களுக்கு சுமாா் 100 பாதுகாவலா்கள் தனியாா் நிறுவனத்தினா் மூலம் பாதுகாப்பு பணி மேற்கொள்ள 28-02-2006 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் மெசா்ஸ் ஏவிஜபி செக்யூரிட்டி சா்வீஸ் நிறுவனத்தினா் கொடுத்த ஒரு பாதுகாவலருக்கு 12 மணி நேர பணிக்கு ரூ 59/- அதற்கான சேவை கட்டணம் (மாதத்திற்கு) 1.5% என்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்க இம்மாநகராட்சி மாமன்ற தீா்மான எண் 71 நாள் 28-07-2006 ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி மெசா்ஸ் ஏவிஜபி செக்யூரிட்டி சா்வீஸ் நிறுவனத்தினா் ஆணையரின் ஆய்விற்காக 100 பாதுகாவலா்களை நேரில் ஆஜா்படுத்து கடிதம் அனுப்பப்பட்டது. இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 5-10-2006,23-10-2006 மற்றும் 8-11-2006 ஆகிய தேதிகளில் ஆணையா் முன் ஆஜா்படுத்தவில்லை. மேலும் இந்நிறுவனத்தினரிடம் போதிய பாதுகாவலா்கள் இல்லை எனத் தெரிய வருகிறது.

எனவே மெசா்ஸ் ஏவிஜபி செக்யூரிட்டி சா்வீஸ் நிறுவனத்தினா் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யவும், அதற்கு அடுத்தபடியாக மெசா்ஸ் சென்ட்ரல் இன்வெஸ்டிகேசன் மற்றும் செய்யூரிட்டி சா்வீஸ் லிட், கோவை நிறுவனத்தினா் கொடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை (ஒரு பாதுகாவலா் ஒருவருக்கு 12 மணி நேர பணிக்கு ரூ.61/- ம் அதற்கான சேவை கட்டணம் (மாதத்திற்கு ) 8% ) ஏற்கவும் மன்றத்தினா் முடிவிற்கு பொருள் சமா்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - மன்றம் முடிவுசெய்யல ாம் எண். 1318/2006/எம்.சி.5**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 218 நாள்.29.12.2006</u>**

**மெசா்ஸ் ஏவிஜபி செக்யூரிட்டி சா்வீஸ் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய தீா்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசா்ஸ் சென்ட்ரல் இன்வெஸ்டிகேசன் மற்றும் செக்யூரிட்டி சா்வீஸ் லிட், கோவை நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும் தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.19</u>**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 5 வாா்டு எண் 70 க்குட்பட்ட பாலன் நகரில் மழைநீா் வடிகால் கட்டும் பணிக்கு மதிப்பீடு. ரூ. 20,50,000/- க்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி கோருதல்.

---------

பாலன் நகா் மிகவும் தாழ்வான பகுதியாகும் . இதனால் சமீபத்தில் பெய்த மழையால் தண்ணீா் செல்ல வழியில்லாமல் தேங்கி நின்று வீடுகளுக்குள் புகுந்து சேதமடைந்துள்ளது. எனவே, இப்பகுதி மக்களுக்கு இது சுகாதார சீா்கேட்டை விளைவிக்கிறது. மேலும் மழை காலங்களில் தேங்கி நிற்கின்ற தண்ணீரை மாநகராட்சியின் பம்பின் உதவியால் இரவு பகலாக அகற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இது அனுமதியற்ற மனைப்பிரிவை சாா்ந்ததாகும். அரசாணை எண்.59 ந.நி(ம)கு.வ.துறை நாள். 25-07-2006 ன் முறைப்படுத்தும் திட்டம் அடிப்படையில் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கலாம் என்ற அடிப்படையிலும் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் ஆய்வின் போது அவா்கள் அளித்த அறிவுரையின் படியும் மற்றும் மாமன்ற உறுப்பினா் அவா்களின் வேண்டுகோளின்படியும் பாலன் நகருக்கு மழைநீா் வடிகால் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை உதவி நிா்வாகப் பொறியாளா் ஆய்வு செய்து மதிப்பீடு ரூ.20,50,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் எண். 11730/2006/டி.1 (வ)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 219 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 20</u>**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவு - வார்டு எண் 66 ல் உள்ள ராஜீவ் காந்தி சாலை மற்றும் முல்லை நகர் பகுதியில் கடந்த வாரம் பெய்த கனத்த மழையால் வெள்ள நீர் சூழ்ந்த பகுதிகளை வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் அலுவலர்கள் ஆய்வு செய்த போது நிரந்தர தீர்வாக வடிகால் அமைக்க அறிவுறுத்தியுள்ளதன் பேரில் மேற்படி இடத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்குத் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண்.1792/2006/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 220 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 21</u>**

கோவை மாநகராட்சி –கிழக்கு மண்டலம் வார்டு எண். 14 க்குட்பட்ட கிருஷ்ணாகாலனி திருச்சிசாலை மற்றும் ஐயர் ஆஸ்பத்திரி சாலை பகுதியில் சமீபத்தில் பெய்த கனமழையால் இப்பகுதியில் மழைநீர் சென்று விட்டபடியால் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/- க்கு கடந்த 21-11-2006 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண்.28875/2006/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 221 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 22</u>**

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 14க்குட்பட்ட கோத்தாரி லே அவுட் பி. ஆர் நகர் பகுதியில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கையாக மழைநீர் வடிகால் கட்டுதல் பணியில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15,50,000/- க்கு தொழல் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்காக மதிப்பீடு ரூ.15,50,000/- க்கு 2006-2007 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண்.28873/2006/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 222 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 23.</u>**

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 64 க்குட்பட்ட கே. எஸ். ராமசாமி வீதி, நஞ்சம்மாள் வீதி, காளியம்மாள் வீதி, பாலசுந்தரம் வீதி, பெரிய சுப்பண்ணன்வீதி, சத்தியா நகர் பகுதியில் சமீபத்தில் பெய்த கனமழையால் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துவிடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள் எனவே, இப்பகுதியில் உள்ள கால்வாயை புதுப்பித்தும் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மார்கெட்டிற்குள் கூடுதலாக வடிகால் அமைத்து தரும்படியும் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் 64 வார்டு மாமன்ற உறுப்பினரும் கேட்டுள்ளனர். மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு ரூ.25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - நிர்வாக அனுமதி வழங்கலாம்.** **எண்.24435/2006/எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 223 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 24**.

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 14 – க்குட்பட்ட சங்கனூர் பள்ளத்தில் கோத்தாரி லே அவுட் அருகில் வெள்ளத்தடுப்பு அபாயத்தை தடுக்கும் விதத்தில் தடுப்பு சுவர் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/- க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இம்மதிப்பீட்டிற்காக செலவுத் தொகை நடப்பு நிதியாண்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக மதிப்பீடு ரூ 25,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **எண்.28872/2006/எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 224 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 25**

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தற்பொழுது மாமன்ற கூட்டம் பழமை வாய்ந்த விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடம் சுமார் 120 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். இக்கட்டிடம் புராதன கட்டிடம் என்ற அடிப்படையில் பத்திரமாக பேணப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கட்டிடத்தில் மாமன்ற கூட்டம் நடத்துவதற்கு போதிய இட வசதி இல்லை கட்டிடத்தின் ஸ்திரத் தன்மையும் கருத்தில் கொள்ள வேண்டி உள்ளது. கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டபோது மாமன்ற கூட்டக் கட்டிடம் ஏதும் கட்டப்படவில்லை எனவே, புதிதாக அனைத்து வசதிகள் கொண்ட ஒரு நவீன மாமன்ற கூட்ட அரங்கம் பிற மாநகராட்சிகளில் உள்ளது போல கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.97,00,000/- க்கு அதற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.42200/2006/எம்.டி.4**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 225 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 26**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள அவினாசி மற்றும் சத்திய மங்கலம் சாலை மற்றும் சத்தி சாலையிலிருந்து மேட்டுப்பாளையம் சாலையினை இணைக்க இணைப்பு சாலையாகவும், திட்ட சாலையாக அமைக்கவும், மற்றும் நிலையில் உள்ள சாலையினை விஸ்தரிக்கவும் உ த்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்சாலை நிலையில் உள்ள அவினாசி சாலையிலிருந்து வடக்கே கொடீசியா வழியாக தமிழ்நாடு வீட்டு வசதிவாரிய சாலை வழியாக சென்று பின்னர் நிலையில் உள்ள உணவு கிடங்குச் சாலை வழியாக வடக்கே சத்தி ரோட்டினை சென்றடைகிறது.

சத்தியமங்கலம் சாலையில் இருந்து மேல்புறமாக இராமகிருஷ்ணா மில் ஒட்டி ராமகிருஷ்ணா சாலையாகவும், நல்லாம்பாளையம் சாலை வழியாக மேட்டுப்பாளையம் சாலை வரை திட்ட சாலையாக மற்றும் இணைப்பு சாலையாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அவினாசி சாலை மற்றும் சத்தி சாலை வரை மற்றும் சத்தி சாலை முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை உள்ள இணைப்பு சாலையின் உத்தேச நீளம் 9. கி.மீ ஆகும். அகலம் 80’X 100’ உத்தேச நில ஆர்ஜித பரப்பு 16.00 ஏக்கர் நில ஆர்ஜித உத்தேச மதிப்பு ரூ.43.5 கோடி ஆகும்.

எனவே, அவினாசி சாலை முதல் சத்தி சாலை வழியாக மேட்டுப்பாளையம் சாலை வரை விஸ்தரிப்பு செய்ய தேவையான நிலத்தினை நில ஆர்ஜிதம் செய்ய ஆகும் மதிப்பீட்டுத் தொகையினை சிறப்பினமாக கருதி அரசிடமிருந்து முழு மானியமாக பெற முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது. சாலை அமைப்பதற்காக மதிப்பீட்டுத் தொகை ஜவஹர்லால் நேரு புனரமைப்புத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அலுவலக் குறிப்பு - அங்கீகரிக்கலாம்** **ந.க.எண்.5141/2003/எச்1**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 226 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்க தீர்மானிக்கப்பட்டது. உத்தேச திட்ட சாலை அமையும் கீழ்கண்ட கிராமங்களில் அடங்கிய கீழ்கண்ட புல எண்களில் உள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்து சாலை அமைக்கவும், நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து கோரவும் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>1) மேட்டுப்பாளையம் சாலை முதல் சத்தியமங்கலம் சாலை வரை</u>**

- **(i) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 8 (80') புல எண்கள் 541/2, 549/3 பாகம், 540/ பாகம்,**
- **(ii) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 9(80') பு.எ.460/3B/2B 1 A2 பாகம், 460/3B/2B 1B2 பாகம், 460/3B/2B 1B1 பாகம், 461/ 1A2 பாகம், 461/ B2 பாகம், 461/ 2B பாகம், 461/ 1B பாகம்.**
- **(iii) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 10(80') பு.எ.467/ 1A பாகம், .467/ 2 பாகம், .467/ 3 பாகம், .467/ 4 பாகம், 467/ 1 பாகம்.**
- **(iv) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 7 பு.எ.468/ 1A பாகம், 522 பாகம், 516 பாகம்.**
- **(v) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 11(80') பு.எ.469/2B பாகம், 470/1C பாகம், 472 பாகம், 473 பாகம், 474 பாகம், 475 பாகம், 476 பாகம்,**
- **(vi) சங்கனூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 6 (80') பு.எ.511/ 2 பாகம், .511/ 1 பாகம், .508/1 பாகம், .508/ 5பாகம், 508/ 6பாகம், 494/ 1 பாகம்,**
- **(vii) கணபதி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 1 (50') பு.எ.548 பாகம், 547 பாகம், 546/1பாகம், 531 பாகம், 528/ 1பாகம், 528/2பாகம், 595/2பாகம், 550 பாகம், 155/பாகம், 487பாகம், 488 பாகம், 489/ 1B பாகம்,585 / 1 பாகம், 365 பாகம், 489/ 2 பாகம், 595/ 1 பாகம்**
- **(viii) கணபதி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 3 பு.எ.471 பாகம், 92 பாகம்.**

**<u>(2) அவினாசி சாலை முதல் சத்தியமங்கலம் சாலை வரை</u>**

- **(i) கணபதி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 3 புல எண்கள் 112/2 பாகம், 110/1 பாகம், 110/ 2பாகம், 109 பாகம், 108 பாகம்**
- **(ii) சிங்காநல்லூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 23 புல எண்கள் 23 பாகம், 22 பாகம்.**
- **(iii) சிங்காநல்லூர் கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 24 புல எண்கள் 18/1 பாகம், 19 பாகம், 20 பாகம், 12 பாகம், 11 பாகம், 3/1 பாகம், 3/ 2 Bபாகம்.**
- **(iv) கணபதி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 4 புல எண்கள் 56/1 பாகம், 56/2 பாகம், 55/ 2A பாகம்.**
- **(v) விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 10 A3-A3 (60') புல எண்கள் 417/3 பாகம், 417/1 பாகம்.**
- **(vi) விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 10 சாலை xx (100') புல எண்கள் 417/1 பாகம், 417/2 பாகம், 404 பாகம், 414 பாகம், 413 பாகம், 410/1 பாகம், 410/2 பாகம், 409 பாகம், 408 பாகம், 407/2 பாகம், 407/1 பாகம், 446 பாகம், 452 பாகம், 453 பாகம்.**

**இச்சாலை அமைக்க தேவைப்படும் சுமார் 22 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

கோவை மாநகராட்சி , கிழக்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகளை எம்.எம்.வி. சேசிஸ்களில் ( 11 புதிய வாகனங்கள் மற்றும் 5 ஏற்கனவே உள்ள வாகனங்களில் பொருத்துதல் ) வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.99.00 இலட்சத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி 31-08-2005 – ல் பெற்று மேற்படி பணிகளுக்கு நான்காவது அழைப்பாக கடந்த 07-11-2006-ல் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு –

1) தி/ள் . ரூபி பாடி ஒர்க்ஸ், சென்னை.
2) தி/ள் .எஸ்டரா பேப்ரிகேட்டர்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
3.) தி/ள் .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை.
4) தி/ள் . ஜெயலட்சுமி இண்டஸ்ட்ரீஸ். கொளத்தூர்.
5) தி/ள் . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப படிவ உறைகளை (Technical Bid covers) கடந்த 15-11-2006-ல் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு பரிசீலனை செய்ததில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே தகுதி பெற்றன. அவை பின்வருமாறு :

1) தி/ள் .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை.
2) தி/ள் . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.

கடந்த 27-11-2006 அன்று மேற்படி இரண்டு நிறுவனங்களையும் அழைத்து ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி ( Financial Bid Covers ) படிவ உறைகளை திறக்கப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கட்டமைப்புகளை எம்.எம்.வி.சேசிஸ்களில் வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவுவதற்கான விலை | மூன்றுஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கான விலை. |
|---|---|---|---|
| 1. | தி/ள் .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை | ரூ.88,80,000/- | ரூ16,80,000/- |
| 2. | தி/ள் . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட்லிமிடெட். காஞ்சிபுரம. | ரூ 90,60,000/- | ரூ.20 ,66,400/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி/ள் .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை, நிறுவனத்தார் இரண்டு இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர். கடந்த 28-11-2006 தேதிய கடிதத்தில் அந்நிறுவனத்தாரை விலையை மேலும் குறைத்துக் கொடுக்க (Negotiations) கேட்டுக் கொண்டதில் மேற்படி நிறுவனத்தார் அவர்களது 29-11-2006-ம் தேதிய கடிதத்தில் பராமரிப்பு பணிகளுக்கான விலையை ரூ 9,60,000/-ஆக குறைத்துக் கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

எனவே கிழக்கு மண்டலத்திற்கான புதிய 11 எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டில் உள்ள 5 எண்ணிக்கை டிப்பர் வாகனங்களின் மேல் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்பினை வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளை செய்வதற்கு தி/ள் .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் சென்னை. நிறுவனத்தார் கொடுத்துள்ள முறையே ரூ.88,80,000/-மற்றும் ரூ 9,60,000/- ம் ஆக மொத்தம் . .ரூ 98,40,000/- மதிப்பீட்டைவிட 0.61% ம் குறைவாக உள்ளதாலும் இது நான்காவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதாலும், குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டமைக்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.9777/2005/எம்.டி.3.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 227 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண்.28**

கோவை மாநகராட்சி , மேற்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டதிற்கு குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகளை எம்.எம்.வி. சேசிஸ்களில் ( 11 புதிய வாகனங்கள் மற்றும் 5 ஏற்கனவே உள்ள வாகனங்களில் பொருத்துதல்) வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.99.00 இலட்சத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் நிர்வாகஅனுமதி 31-08-2005 – ல் பெற்று மேற்படி பணிகளுக்கு நான்காவது அழைப்பாக கடந்த 07-11-2006-ல் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு

1) திரு . ரூபி பாடி ஒர்க்ஸ், சென்னை.
2) திரு .எஸ்ட்ரா பேப்ரிகேட்டர்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
3.) திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை
4) திரு . ஜெயலட்சுமி இண்டஸ்ட்ரீஸ். கொளத்தூர்.
5) திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.
6) திரு. மெக்கோ கோச் பில்டர்ஸ் , கோவை – 43.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப படிவ உறைகளை (Technical Bid covers) கடந்த 15-11-2006-ல் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஓப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு பரிசீலனை செய்ததில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே தகுதி பெற்றன. அவை பின்வருமாறு :

1) திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை.
2) திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.

கடந்த 27-11-2006 அன்று மேற்படி இரண்டு நிறுவனங்களையும் அழைத்து ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி ( Financial Bid Covers ) படிவ உறைகளை திறக்கப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கட்டமைப்புகளை எம்.எம்.வி.சேசிஸ்களில் வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவுவதற்கான விலை. | மூன்றுஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கான விலை. |
|---|---|---|---|
| 1. | திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை. | ரூ .88,80,000/- | ரூ 16,80,000/- |
| 2. | திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட்லிமிடெட். காஞ்சிபுரம். | .ரூ 90,60,000/- | ரூ. 20 ,66,400/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை. நிறுவனத்தார் இரண்டு இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர். கடந்த 28-11-2006 தேதிய கடிதத்தில் அந்நிறுவனத்தாரை விலையை மேலும் குறைத்துக் கொடுக்க (Negotiations) கேட்டுக் கொண்டதில் மேற்படி நிறுவனத்தார் அவர்களது 29-11-2006-ம் தேதிய கடிதத்தில் பராமரிப்பு பணிகளுக்கான விலையை .ரூ 9,60,000/-ஆக குறைத்துக் கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

எனவே மேற்கு மண்டலத்திற்கான புதிய 11 எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டில் உள்ள 5 எண்ணிக்கை டிப்பர் வாகனங்களின் மேல் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்பினை வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளை செய்வதற்கு திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் சென்னை. நிறுவனத்தார் கொடுத்துள்ள முறையே ரூ.88,80,000/-மற்றும் .ரூ 9,60,000/- ம் ஆக மொத்தம் . .ரூ 98,40,000/- மதிப்பீட்டைவிட 0.61% ம் குறைவாக உள்ளதாலும் இது நான்காவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதாலும், குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டமைக்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.9775/2005/எம்.டி.3.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 228 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.29</u>

கோவை மாநகராட்சி , வடக்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டதிற்கு குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புகளை எம்.எம்.வி. சேசிஸ்களில் ( 11 புதிய வாகனங்கள் மற்றும் 5 ஏற்கனவே உள்ள வாகனங்களில் பொருத்துதல்) வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.99.00 இலட்சத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் நிர்வாகஅனுமதி 31-08-2005 – ல் பெற்று மேற்படி பணிகளுக்கு நான்காவது அழைப்பாக கடந்த 07-11-2006-ல் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு –

1) திரு . ரூபி பாடி ஒர்க்ஸ், சென்னை.
2) திரு .எஸ்ட்ரா பேப்ரிகேட்டர்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
3.) திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை
4) திரு . ஜெயலட்சுமி இண்டஸ்ட்ரீஸ். கொளத்தூர்.
5) திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப படிவ உறைகளை (Technical Bid covers) கடந்த 15-11-2006-ல் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு பரிசீலனை செய்ததில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே தகுதி பெற்றன. அவை பின்வருமாறு :

1) திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை.
2) திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட். காஞ்சிபுரம்.

கடந்த 27-11-2006 அன்று மேற்படி இரண்டு நிறுவனங்களையும் அழைத்து ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி ( Financial Bid Covers ) படிவ உறைகளை திறக்கப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கட்டமைப்புகளை எம்.எம்.வி.சேசிஸ்களில் வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவுவதற்கான விலை. | மூன்றுஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளுக்கான விலை. |
|---|---|---|---|
| 1 | திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் . சென்னை. | ரூ .88,80,000/- | ரூ 16,80,000/- |
| 2. | திரு . ஜி. எஸ் பாடி பில்டர்ஸ் பிரைவேட்லிமிடெட். காஞ்சிபுரம். | .ரூ 90,60,000/- | ரூ. 20 ,66,400/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் சென்னை. நிறுவனத்தார் இரண்டு இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர். கடந்த 28-11-2006 தேதிய கடிதத்தில் அந்நிறுவனத்தாரை விலையை மேலும் குறைத்துக் கொடுக்க (Negotiations) கேட்டுக் கொண்டதில் மேற்படி நிறுவனத்தார் அவர்களது 29-11-2006-ம் தேதிய கடிதத்தில் பராமரிப்பு பணிகளுக்கான விலையை ரூ 9,60,000/-ஆக குறைத்துக் கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

எனவே வடக்கு மண்டலத்திற்கான புதிய 11 எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டில் உள்ள 5 எண்ணிக்கை டிப்பர் வாகனங்களின் மேல் 8 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்பினை வடிவமைத்து அவற்றின் மேல் நிறுவப்பட்டு அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகளை செய்வதற்கு திரு .என். எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ் சென்னை. நிறுவனத்தார் கொடுத்துள்ள முறையே ரூ.88,80,000/-மற்றும் .ரூ 9,60,000/- ம் ஆக மொத்தம் . .ரூ 98,40,000/- மதிப்பீட்டைவிட 0.61% ம் குறைவாக உள்ளதாலும் இது நான்காவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதாலும், குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டமைக்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.9775/2005/எம்.டி.3.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 229 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 30</u>

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீா் நிலைகளை பழைய நிலைக்கு கொணருதல் (Rejuvenation) மற்றும் மழைநீா் சேகரிப்பு அமைத்தல் திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஆலோசகா்களை நியமிக்க பாா்வையில் கண்ட நகராட்சி நிா்வாக ஆணையாளா் உத்திரவிற்கிணங்க திட்ட கேட்பு அறிக்கை ( R.F.P) கோரப்பட்டதில் 29-11-2006 தேதியில் கீழ்க்கண்ட ஆலோசகா்களிடமிருந்து உத்தேச திட்ட அறிக்கைகள் தொழில் நுட்ப கருத்துரை அடங்கிய உறைகள் (Technical proposal) மற்றும் (Financial Bid) விலைப்புள்ளி அடங்கிய உறைகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டன.

1. தி/ள் ஆஸ்க் கன்சல்டன்சி சா்வீஸஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சென்னை.
2. தி/ள். மோட் மெக் டொனால்டு பிரைவேட் லிமிடெட் சென்னை.
3. தி/ள். ஆ.்.ப்ரோ ( ஆக்சன் பாா் புட் புரொடக்சன்) பெங்களூா்.

அவ்வாறு பெறப்பட்ட 3 அறிக்கைகளின் தொழில்நுட்ப தகுதியை 30-11-2006 – ம் தேதிய தொழில் நுட்ப ஆய்வுக் கூட்டத்தில் ஒரு ஆலோசகா் மட்டும் தகுதியுடையவராக தோ்வு செய்யப்பட்டு விலைப்புள்ளி அடங்கிய உறைகள் ( Financial Bid) 1-12-2006 ம் நாள் 12.30 மணிக்கு திறப்பதற்கு கலந்து கொள்ளுமாறு அந்நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

1-12-2006 – ம் தேதிய 12.30 மணிக்கு தி/ள். ஆ.்.ப்ரோ ( ஆக்சன் பாா் புட் புரொடக்சன்) பெங்களூா். அவா்களின் முன்னிலையில் விலைப்புள்ளி ( Financial Bid)மட்டும். திறக்கப்பட்டது.

தி/ள். ஆ.்.ப்ரோ ( ஆக்சன் பாா் புட் புரொடக்சன்) பெங்களூா். (M/s. AFPRO Action for food production , Bangalore) .ரூ. 40,86,250/-.க்கு குறிப்பிட்டுள்ளனா். இந்நிறுவனத்தினரை 2-12-2006 அன்று விலைப்புள்ளியை குறைத்து தரக்கோரியதில் (Negotiation),இந்நிறுவனம் .ரூ. 40,86,250/-.லிருந்து .ரூ. 40,00,000/-.க்கு விலைபபுள்ளியை குறைத்து தர 2-12-2006 – ம் தேதிய கடிதத்தில் இசைவு தெரிவித்துள்ளனா் சேவை வரியாக 12.24 சதவீதம .ரூ. 4,89,600/-.ஆக மொத்தம்.ரூ. 44,89,600/- ஆகும்.

எனவே ,தி/ள். ஆ.்.ப்ரோ ( ஆக்சன் பாா் புட் புரொடக்சன்) பெங்களூா். (M/s. AFPRO Action for food production , Bangalore) அவா்களை .ரூ. 44,89,600/- க்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி பணியை மத்திய அரசின் நகா்புற வளா்ச்சித் துறை இணைச் செயலாளா், தமிழ்நாடு நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை செயலாளா் மற்றும் நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் 06-11-2006 ம் தேதிய கூட்டத்தில் மேற்படிதிட்டப் பணிகளை விரைந்து செய்து முடிக்கும் பொருட்டு நடப்பு ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உடன் ஆலோசகா்களை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 31-12-2006க்குள் மத்திய அரசுக்கு சென்று அடையும் வண்ணம் ஆலோசகா்களை விரைவாக நியமனம் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளாா்கள். மேற்படி திட்டத்தினை ஏற்கனவே மன்றம் அனுமதித்துள்ளதால் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிா்நோக்கி வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று வரிவான திட்டஅறிக்கை தயாரிக்க (DPR),தி/ள். ஆ.்.ப்ரோ ( ஆக்சன் பாா் புட் புரொடக்சன்) பெங்களூா். (M/s. AFPRO Action for food production , Bangalore) அவா்களுக்கு ஒப்படைப்பு செய்ய உத்தரவு வழங்கப்பட்டதற்கும். இச்செலவினத்தினை ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஈடு செய்து கொள்ளும் பொருட்டும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.13090/2006/எம்.டி.3.**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 230 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசு அனுமதித்துள்ளபடி திட்ட அறிக்கையினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.31</u>** கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - சின்னசாமி ரோடு ஸ்ரீ அய்யப்பன்கோவில் முன்புறம் சாலையோரத்தில் 17-11-2006 முதல் 15-01-2007 முடிய தற்காலிக கடைகள் அமைக்க அனுமதி வழங்கியது – தொடர்பாக.

-----------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 29 வது வார்டு சின்னசாமி ரோடு ஸ்ரீ அய்யப்பன்கோவிலின் முன்புறம் உள்ள சாலை ஓரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அய்யப்பன்கோவில் விழாக்காலங்களில் தற்காலிகக் கடைகள் சென்ற ஆண்டு ஏலம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கோவிலில் விழா நடைபெற உள்ளதால் விழாக்காலத்திற்கு அதாவது 17-11-2006 முதல் 15-01-2007 வரை வைப்புத் தொகை, காப்புத் தொகை, மற்றும் மாமன்றம் தீர்மானித்த நிப்நதனைகளுடன் சென்ற ஆண்டைப் போலவே, ஏலம் விட வேண்டும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு மற்றும் மாமன்ற கூட்டம் நடைபெறாத காரணத்தால் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று 15-11-2006 மற்றும் 17-11-2006 ம் தேதிய ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது ஏலம் கோரியது தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

<u>17-11-2006 ம் தேதி முதல் 15-01-2007 தேதி வரை ஸ்ரீ அய்யப்பன்கோவில் முன்புறம் மாநகராட்சி காலியிடத்தில் கடை அமைத்துக் கொள்ள ஏலம் கோரியது பற்றி விவரங்கள் அடங்கிய பட்டியல்.</u>

| வ.எண் | கடை எண் | கடை அளவு | ஏலம் கோரியவர்கள் பெயர் | ஏலத் தொனை | ஒப்பந்தப் புள்ளித் தொகை | சென்ற ஆண்டு ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 10'x 8' | திரு.மூர்த்தி | ரூ.20,700 | - | ரூ.1,900 |
| 2 | 2 | 8'x6' | திரு.பி.ராஜன் | ரூ.8,600 | - | ரூ.1,600 |
| 3 | 3 | 8'x8' | திரு.பி.கே.பிரபாகரன் | ரூ.2,400 | - | ரூ.2,000 |
| 4 | 4 | 6''x8' | யாரும் ஏலம் கோர முன்வரவில்லை | -- | - | -- |
| 5 | 5 | 10'x8' | திரு.எஸ்.நடராஜன் | ரூ.3,000 | - | ரூ.2,700 |
| 6 | 6 | 8'x8' | திரு. என்.மனோகரன் | ரூ.2,100 | - | ரூ.1,700 |
| 7 | 7 | 4'x8' | திரு.வி.கனகரத்தினம் | ரூ.1,750 | - | ரூ.1,500 |
| 8 | 8 | 5'x8' | திரு.எம். முருகேசன் | ரூ.5,000 | - | ரூ.1,800 |
| 9 | 9 | 8'x8' | திரு.வி.கனகரத்தினம் | ரூ.2,000 | - | ரூ.1,800 |
| 10 | 10 | 8'x8' | திரு. ரவி | ரூ.4,800 | ரூ.7,000 | ரூ.4,500 |
| 11 | 11 | 6'x8' | திரு.பாலு | ரூ.6,000 | ரூ.7,000 | ரூ.4,500 |

மேற்படி கடைகளுக்கு உண்டான இடத்தினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் 15-11-2006 மற்றும் 17-11-2006 ம் தேதிய முன் ஒப்புதல் பெற்று ஏலம் கோரியதற்கும் மற்றும் மேற்படி ஏலத்தில் உச்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம்..** **ந.க.எண். 12152/2005/அ4(வ)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 231 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 32</u>**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவு - திருத்தப்பட்ட கட்டுமானப் பொருட்களின் விலைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் - திருத்தப்பட்ட விலை பட்டியல்படி தரப்படுத்தப்பட்ட விலை தயாரித்து அமுல்படுத்தவும் அனுமதி வேண்டி சமர்ப்பித்தல்.

முதன்மைப் பொறியாளர் மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (பொது) கீழ் நிலை ஆதாரம், அவர்களின் கடித எண் HDO / 31257 /2004 நாள் 21-11-2006 மற்றும் கடித எண்HDO / 25440 / 2005 நாள் 21-11-2006 – ல் முறையே கட்டுமானப் பொருட்கள் சிமெண்ட் விலை மற்றும் செங்கல் , ஜல்லிகள் விலை, தொழிலாளர்களின் தினக்கூலிகள் திருத்தி அமைக்கப்பட்டு 15-11-2006 முதல் நடைமுறை படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் விலை விபரப்பட்டியல் மற்றும் தொழிலாளர்கள் கூலிகள் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும் இத்திருத்தப்பட்ட கட்டுமானப் பொருட்களின் விலைப்பட்டியலினையும் தொழிலாளர்கள் தினக்கூலியினையும் கொண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபரங்கள் தயாரித்து அமுல்படுத்த அனுமதி வேண்டி பொருள் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.10385/2006/தொ.நு.உ.(தெ).**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 232 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 33**

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண்.16க்குட்பட்ட திருமகள் நகர் அருகில் உள்ள பள்ளத்தில் சமீபத்தில் பெய்த கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இனி வரும் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள அரிப்பு அபாயத்தை தடுக்கும் விதத்தில் தடுப்புசுவர் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.19,00,000/- க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.28868/06/எம்.டி.2.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 233 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 34**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் வார்டு எண் 43 க்குட்பட்ட கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும்பணிக்கு ரூ.25,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்குமாறு மாமன்ற உறுப்பினர் தனது 8-11-2006 ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள்வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.42233/06/எம்.டி.4.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 234 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 35**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 15-12-2006 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12905/05/ எம்.டி.2 | வார்டு எண்.30 காந்திபுரம் வீதி 3 மற்றும் 4 ல் குடிநீர் பகிர்மான குழாய் கூடுதலாக அமைத்தல். | 1.50 | 21-11-06 மூன்றாம் அழைப்பு | திரு.உமாபதி | 1.05% அதிகம் |
| 2. | 6154/05/ எம்.டி.2 | வார்டு எண்.30 சக்தி ரோடு ஆடு அறுவைமனையின் கடைகள் கட்டுதல் | 4.50 | 16-11-06 இரண்டாம் அழைப்பு | திருமதி. கே. பங்கஜம். | 4.50% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | 11430/05/ எம்.டி.2 | வார்டு எண். 30 சக்தி ரோடு உரக்கிடங்கில் தடுப்புசுவர் மராமத்து பணி. | 5.00 | 16-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி இன்சினியர்ஸ் | 3.83% அதிகம் |
| 4 | 5739/05/ எம்.டி.2 | வார்டு எண். 2சி.எம்.சி காலனி சாலையில் மறுதார் தளம் அமைத்தல் | 3.00 | 22-11-06 ஐந்தாம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.49% அதிகம் |
| 5. | 6319/05/ எம்.டி2 | வார்டு எண்.7 காமராஜு நகர் சாலையில் எஸ்.எப்.எண். 512/2,517/2/ மற்றும் 517/8 ல் புதிய தார்தளம் அமைத்தல் | 13.00 | 22-11-06 நான்காம் அழைப்பு | திரு. என். ஆறுச்சாமி | 4.44% அதிகம் |
| 6 | 9213/04/ எம்.டி2 | வார்டு எண். 65 சங்கனூர் சாலை முதல் ரயில்வே லைன் மேற்கு வரை சாலையை அகலப்படுத்துதல் மற்றும் மறு தார் தளம் அமைத்தல் | 4.75 | 21.11-06 எட்டாம் அழைப்பு | தி/ள் சரவணா கன்ஸ்ரக்சன்ஸ். | 4.59% அதிகம் |
| 7 | 5803/05/ எம்.டி.2 | வார்டு எண்.70 கணபதி நகரில் மறு தார் தளம் அமைத்தல். | 4.20 | 21-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. பி. சுனில் குமார். | 4.35% அதிகம் |
| 8. | 6327/05/ எம்.டி.2 | வார்டு எண். 66 சங்கனூர் காமாட்சி நகரில் மறுதார்தளம் அமைத்தல் | 3.00 | 21-11-06 நான்காம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.64% அதிகம் |
| 9. | 5687/05 எம்.டி.2 | வார்டு எண்.65 நல்லாம்பாளையம் கந்தன் நகரில் புதிய தார்தளம் அமைத்தல். | 5.00 | 21-11-06 நான்காம் அழைப்பு | திரு. என் . ஆறுச்சாமி | 4.46% அதிகம் |
| 10 | 12901/05/ எம்.டி.2 | வார்டு எண். 31 கோகலே வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் கூடுதலாக அமைத்தல் | 2.50 | 21-11-06 ஆறாம் அழைப்பு | திரு. ஆர். உமாபதி | 0.88% அதிகம் |
| 11. | 5875/05/ எம்.டி2 | வார்டு எண்.30 சக்திசாலை உரக்கிடங்கில் கான்கிரீட் தளம் மற்றும் பெயர்பலகை அமைத்தல் | 5.00 | 16-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. அர் செல்வராஜ் | 4.97% அதிகம் |
| 12 | 8286/05/ எம்.டி2 | வார்டு எண். 3 காந்தி வீதி, ஜீவா வீதி சக்கரைய்யா வீதி மற்றும் திரு.வி.கா. வீதியல் மறு தார் தளம் அமைத்தல் | 4.40 | 21.11-06 நுான்காம் அழைப்பு | திரு. ஏ. ராஜு | 4.79% அதிகம் |
| 13. | 8153/04/ எம்.டி2 | வார்டு எண். 65 தண்டல் முத்து வீதியில் மறு தார் தளம் அமைத்தல் | 2.20 | 21-11-06 ஏழாம் அழைப்பு | திரு. பி . சுனில் குமார் | 4.38% அதிகம் |
| 14. | 16262/05 எம்.டி.2 | வார்டு எண்.29 ல் சித்தாபுதூர் மாநகராட்சி பள்ளி கழிப்பிடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 2.20 | 21-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். சப்தகிரி போர்வெல்ஸ் | 4.80% அதிகம் |
| 15 | 16272/05/ எம்.டி.2 | வார்டு எண். 33 , 68 மாநகராட்சி இரத்தினபுரி உயர்நிலைப்பள்ளி ஆரம்பப்பள்ளி மற்றும் டாடாபாத் ஆரம்பப்பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்ய மின் மோட் டார் கம்பரசர் மற்,றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 1.05 | 21-11-06 இரணடாம் அழைப்பு | தி/ள். சப்தகிரி போர்வெல்ஸ் | 4.76% அதிகம் |
| 16. | 16271/05/ எம்.டி2 | வார்டு எண்.31 வடகோவை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளியில் கழிவறைகளை சுத்தம் செய்ய மின் மோட்டார் கம்பரசர் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 0.80 | 21-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். சப்தகிரி போர்வெல்ஸ் | 4.68% அதிகம் |
| 17 | 10563/05/ எம்.டி2 | வார்டு எண். 17 ஈபி காலனியில் குழாய்களை பதித்த இடத்தில் தார் தளம் அமைத்தல் | 3.00 | 21.11-06 இரண்டாம் அழைப்பு | திரு. என்.ஆறுச்சாமி | 4.71% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றதிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** . வரிசை எண் 1 முதல் 17 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் - **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 12905/ எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 235 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 36</u>**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 15-12-2006 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9583/05/ எம்.டி.4 | வார்டு எண்1.30 காமராஜர் ரோட்டில் தார் தளம் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 5.00 | 22-11-06 ஐந்தாம் அழைப்பு | திரு.எ. அம்மாசையப்பன் | 4.78% அதிகம் |
| 2. | 1528/05/ எம்.டி.4 | வார்டு எண்.35 காமராஜர் புரம் மழைநீர் வடிகால் கட்டுதல். | 15.00 | 22-11-06 முன்றாம் அழைப்பு | தி/எ். எம்.எஸி இன்சினியர்ஸ் | 4.65% அதிகம் |
| 3. | 1529/05/ எம்.டி.4 | வார்டு எண். 35 முத்து மாரியம்மன் கோயில் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3.00 | 22-11-06 மூன்றாம் அழைப்பு | தி/எ். எம்.எஸி இன்சினியர்ஸ் | 4.80% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றதிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** . வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் - **அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 9583/ எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 236 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 37</u>**

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.4 வார்டு எண் 32-ல் உள்ள டாக்டர் ராஜேந்திரபிரசாத் சாலையில் பவர் ஹவுஸ் முதல் கிழக்காக நடைபாதையை அபிவிருத்தி மற்றும் மராமத்து செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.16,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு உள்ளது.

மேற்படி இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்.** **ந.க.எண்.012922/06/எம்.டி.2..**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 237 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 38**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 3 க்குட்பட்ட தண்ணீர் பந்தல் சாலை (குருசாமி நகர் முதல் தென்புறமாக அவினாசி சாலை வரை) தார்தளம் கடந்த சில நாட்களாக பெய்த கனத்தமழை காரணமாக தார்சாலை மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. தவிர அதிகப்படியான மக்கள் இச்சாலையினை பயன்படுத்துவதால் தார்தளம் புதுப்பிக்கப்படவேண்டியுள்ளது. எனவே, தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு ரூ.25,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் பந்தல் சாலை குருசாமி நகர் முதல் தென்புறமாக அவினாசி சாலை வரை தார் தளம் புதுப்பித்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம்** **ந.க.எண்.12224/06/எம்.டி.4..**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 238 நாள்.29.12.2006**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பொருள். எண்.39**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 18-12-2006 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6811/06/ எம்.டி.2 | வார்டு எண் 70 சின்னசாமி நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 18.00 | 30-11-06 முதல் அழைப்பு | தி/ள். பி. செந்தில் அன்.கோ | 0.09% அதிகம் |
| 2. | 11216/05/ எம்.டி.4 | வார்டு எண்.62 கிருஷ்ணம்மாள் வீதி, தென்புறம் ஐ.கே.சுந்தரம் முதல் மணியம் வேலப்பர் கவுண்டர் வீதி வரை மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் | 4.00 | 23-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. கே. ஆறுமுகம். | 4.41% அதிகம் |
| 3. | 8571/06/ எம்.டி.4 | வார்டு எண். 57 சின்னசாமி நாயக்கர் தோட்டம் குறுக்கு சாலைக்குதார் தளம் அமைத்தல். | 4.00 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | திருமதி. எ.மீனாட்சி | 4.88% அதிகம் |
| 4 | 15002/06/ எம்.டி.4 | வார்டு எண் 27 வ.உ.சி பூங்கா சுற்றுச்சுவர் பராமரிப்பு பணி செய்தல் | 5.00 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | திரு. என். குரவாயூரப்பன், | 4.92% அதிகம் |
| 5 | 7181/06/ எம்.டி.4 | வார்டு எண்.36 சிரியன் சர்ச் ரோடு 3-ல் உள்ள பொதுக் கழிப்பிடம் திரும்பக் கட்டுதல் | 4.70 | 12-12-06 இரணடாம் அழைப்பு | திருமதி. கே. பங்கஜம். | 4.91% அதிகம் |
| 6 | 6375/06/ எம்.டி.4 | உக்கடம் டோபி கானாவில் சிமெண்ட கான்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | 3.00 | 23-11-06 இரண்டாம் அழைப்பு | தி/ள். எம். எஸ் இன்ஜினியர்ஸ். | 4.39% அதிகம் |
| 7 | 7493/06/ எம்.டி.4 | வார்டு எண். 51 சுப்ரமணியம் ரோட்டில் உள்ள மாநகராட்சி இடத்திற்கு முன்புறம் ( பழைய தார்கிடங்கு) சுற்றுச் சுவர் கட்டுதல் | 1.80 | 12-12-06 மூன்றாம் அழைப்பு | தி/ள். பெல்லோ பவுண்டேசன் | 4.87% அதிகம் |
| 8 | 7805/06/ எம்.டி.2 | வார்டு எண் 43 கெம்பட்டி காலனி வீதி எண்1,2,5 மற்றும் 7-ல் மறு தார் தளம் அமைத்தல் | 5.80 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. எம் . துரைசாமி | 4.96% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | 3145/05/ எம்.டி.4 | வார்டு எண். 47 தெப்பக்குளம் வீதி, எண். 1,2,3 மற்றும் 4 – ல் மறுதார் தளம் அமைத்தல் | 11.25 | 28-11-06 மூன்றாம் அழைப்பு | திரு. எம் . துரைசாமி | 4.94% அதிகம் |
| 10. | 15707/06/ எம்.டி.4 | வார்டு எண். 25 வி.சி.கே. லே அவுட் ஜி. ஆர். ஜி லே-அவுட் மற்றும் கோபாலபுரம் சந்து ½ மற்றும் 3-ல் மறு தார் தளம் அமைத்தல். | 10.25 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | திரு.. எ. வெங்கடாசலம் | 4.57% அதிகம் |
| 11 | 15708/05/ எம்.டி.4 | வார்டு எண் 25 ஈஸ்வரன் செட்டியார் லே – அவுட்டில் மறு தார் தளம் அமைத்தல் | 7.25 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | திரு.. எ. வெங்கடாசலம். | 4.66% அதிகம் |
| 12 | 15706/05/ எம்.டி.4 | வார்டு எண். 25 ல் பாஷ்யம் லே-அவுட் ரோடு மற்றும் சி7-சி7 ஸ்கீம் ரோட்டில் மறுதார்தளம் அமைத்தல் | 5.60 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர் . கிருஷ்ணசாமி | 3.71% அதிகம் |
| 13 | 9240/05/ எம்.டி.4 | வார்டு எண். 43 தர்மராஜா கோவில் வீதி முதல் அங்காளம்மன் கோவில் வீதி வரை மறுதார் தளம் அமைத்தல் | 8.50 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | தி/எ். ஏ அம்மாசையப்பன். | 2.35% அதிகம் |
| 14 | 5622/06/ எம்.டி.4 | வார்டு எண். 54 சாரமேடு மெயின் ரோட்டில் மறு தார் தளம் அமைத்தல் | 9.60 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | தி/எ். ஏ அம்மாசையப்பன் | 4.58'% அதிகம் |
| 15 | 199/06/ எம்.டி.4 | வார்டு எண் 42 அசோக் நகர் மற்றும் பாலாஜி அவென்யூ ரோட்டில் மறு தார் தளம் அமைத்தல் | 17.20 | 28-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. எம் . சரோஜினி | 4.61% அதிகம் |
| 16. | 5534/06/ எம்.டி.4 | வார்டு எண். 2செங்காளியப்பன் நகரில் மறுதார் தளம் அமைத்தல் | 13.20 | 30-11-06, இரண்டாம் அழைப்பு | திரு. எம் . துரைசாமி | 4.90% அதிகம் |
| 17. | 9024/06/ எம்.டி.2 | வார்டு எண். 8 ராமசாமி நகர் மெயின் ரோடு மற்றும் மேதா லே – அவுட் பகுதியில் குடிநீர் பிரதான குாய் அமைத்தல் | 4.95 | 6-12-06 நான்காம் அழைப்பு | திருமதி..கே ரேணுகாதேவி | 4.69% அதிகம் |
| 18 | 9025/06/ எம்.டி.2 | வார்டு எண் 8 என்.கே.ஜி நகர் கிருஷ்ணம்மா நாயுடு வீதி மற்றும் சொர்ணமணி லே அவுட்டில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 4.20 | 6-12-06 நான்காம் அழைப்பு | திருமதி..கே ரேணுகாதேவி | 4.22% அதிகம் |
| 19 | 9098/06/ எம்.டி.2 | வார்டு எண். 23 டி. நகர் சுப்பையன் வீதி நீர் மானிய காரர் வீதியில் குடிநீர் பிரதான குாய் அமைத்தல் | 2.20 | 6-12-06 நான்காம் அழைப்பு | திருமதி.பி.கே. நிர்மலா | 4.94% அதிகம் |
| 20 | 9033/06/ எம்.டி.2 | வார்டு எண். 10 தந்தை பெரியார் நகர் ஸ்ரீ தனலட்சுமி நகர் , சக்தி நகர், முகாம்பிகை நகர் மற்றும் எம்.கே.பி ரோடு பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | 5.00 | 6-12-06 நான்காம் அழைப்பு | திருமதி. பி.கே. நிர்மலா | 4.94% அதிகம் |
| 21 | 5749/06/ எம்.டி.2 | வார்டு எண்.29 என்.ஜி.என். வீதியில் மறு தார் தளம் அமைத்தல் | 13.50 | 30-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 4.47'% அதிகம் |
| 22 | 5412/06 எம்.டி.2 | வார்டு எண் 72 மணிகாரம் பாளையம் மயானம் சாலையில் தார் தளம் அமைத்தல். | 12.00 | 30-11-06 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 4.22% அதிகம் |
| 23 | 8285/05/ எம்.டி.2 | வார்டு எண்.2 விளாங்குறிச்சி சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 8.00 | 30-11-06 மூன்றாம் அழைப்பு | தி/எ் .சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.44% அதிகம் |
| 24 | 7554/06 எம்.டி.2 | வார்டு எண்.65 நல்லாம்பாளையத்தில் உள்ள அண்ணா நகரில் மறுதார் தளம் அமைத்தல் | 4.40 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | தி/எ் குரு ரோடு வேஸ் | 4.88% அதிகம் |
| 25 | 7551/06/ எம்.டி.2 | வார்டு எண்.65 நல்லாம்பாளையத்தில் உள்ள ரங்கா லே அவுட் 2-ல் மறுதார் தளம் அமைத்தல் | 3.60 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | தி/எ் குரு ரோடு வேஸ் | 1.32% அதிகம் |
| 26 | 7552/06 எம்.டி.2 | வார்டு எண்.65 நல்லாம்பாளையத்தில் உள்ள ரங்கா லே அவுட் 1-ல் மறுதார் தளம் அமைத்தல். | 4.50 | 12-12-06 இரண்டாம் அழைப்பு | தி/எ் குரு ரோடு வேஸ் | 4.89% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றதிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** . வரிசை எண் 1 ல் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 2 முதல் 26 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் - **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.˙ 6811/06/ எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 239 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 40</u>**

கோவை மாநகராட்சியில் தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் ரூ. 90.00 இலட்சங்களில் பெரிய கடைவீதி அருள்மிகு கோணியம்மன் கோவில் எதிரில் உள்ள மாநகராட்சி வாகன நிறுத்துமிடத்தில் கட்ட மாமன்றம் தனது தீர்மான எண் 186இ நாள் 11-06-2001-ல் தீர்மானம் நிறைவேற்றி இத்திட்ட உத்தேசம் நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு˙ அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் கடித எண் . 20699/2003/எம்.சி.பி. 1 நாள் 23-10-2002 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்ட போது அவர்கள் தனது கடித எண். 1655/2004/டி.ஓ. தேதி 8-11-2005-ல் ரூ.50.00 இலட்சங்களில் தரைத் தளம் மட்டும் உத்தேசிக்கப்பட்ட இடத்தில் கட்ட அனுமதி அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் நகர் மண்டபம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பெருகி வரும் வணிக வளாகங்களாலும், போக்குவரத்து நெரிசல்களாலும் வாகனங்கள் நிறுத்த போதுமான மாநகராட்சி பொது இடம் சுற்று வட்டாரப் பகுதியில் இல்லாத காரணத்தால் போக்குவரத்து நெரிசல்களை சீர் செய்யும் பொருட்டு வாகனங்கள் நிறுத்துமிடம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, தற்போது தெற்கு மண்டலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள அருள்மிகு கோணியம்மன் கோவில் எதிரே உள்ள மாநகராட்சி இடத்தில் வாகன நிறுத்தும் இடத்திற்கு உபயோகித்துக் கொண்டு கோவை மாநகராட்சியின் ஆய்வு மாளிகை அமைந்துள்ள˙ T.S.No. 952 பிளாக் எண் 15 வார்டு எண்.1 கோவை பொது உபயோகத்தில் உள்ள காலியிடத்தில் தெற்கு மண்டலம் அலுவலக கட்டிடத்தினை ஏற்கனவே அனுமதித்துள்ள இடத்திற்கு பதிலாக கட்ட அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு -அனுமதிக்கலாம்** **ந.க.எண்.12224/06/எம்.டி.4..**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 240 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 41</u>**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தமிழக அரசின் உள்துறை செயலாளருக்கு முகவரியிட்ட நேர்முக கடித எண்.5/ 2006/ முகாம் நாள். 13-12-2006 கடிதத்தில் கோவை மாநகரம் தமிழகத்தின் அடுத்த தகவல் தொழில்நுட்ப மாநகரமாக அபிவிருத்தியடைய உள்ளதால், கோவை மாநகரின் மையப்பகுதியில் 173 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் இயங்கி வரும் மத்திய சிறைச் சாலையை புறநகர் பகுதியான வெள்ளலூர்க்கு மாற்றலாம் எனவும், அவ்வாறு காலி செய்யப்படும் மத்தியச் சிறைச்சாலை இடத்தை மாநகராட்சிக்கு ஒப்படைத்து மாநகராட்சி மூலம் அவ்விடத்தில் உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் தாவரவியல் பூங்கா போன்ற வசதிகளை வருமானம் ஈட்டும் வகையில் தனியார் மூலம் செயல்படுத்திடலாம் எனவும் தெரிவித்து, இம் மொழிவினை பரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளனர். இந்த முன்மொழிவு மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம்** **ந.க.எண்.177740/06/MH 5.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 241 நாள்.29.12.2006</u>**

**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்மொழிவினை ஏற்று மாநகரின் மையப்பகுதியில் இயங்கி வரும் மத்திய சிறையினை வெள்ளலூர்க்கு மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. வெள்ளலூரில் உள்ள மாநகராட்சி இடத்திலிருந்து 173 ஏக்கர் நிலத்தினை சிறைச்சாலைத்துறைக்கு வழங்கி அதற்கு ஈடாக தற்போது சிறைச்சாலையாக செயல்பட்டு வரும் 173 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை மாநகராட்சிக்கு நில பரிவர்த்தனை (Exchange of land) செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 42</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நன்கொடையாளர்கள் மூலம் நவீன பஸ் செல்டர்கள் அமைக்க விதிமுறைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி முடிவெடுத்த ஆணையாளர் அவர்கள் ஒதுக்கீடு செய்யலாம் என்றும், மாநகராட்சி பகுதியில் அமைக்கப்படும் பேருந்து நிழற்குடை ஒன்றுக்கு நில வாடகையுடன் கூடிய உரிமக் கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூ. 25,000/- மற்றும் பேருந்து நிழற்குடையில் விளம்பரம் செய்வதற்கு ஆறு மாதத்திற்கு 1 ச.மீட்டருக்கு ரூ.250/-என்றும் நிர்ணயம் செய்து மாமன்ற தீர்மானம் எண்.23 நாள் 20-04-2002 ல் அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பேரில் பஸ் செல்ட்டர் அமைத்து பராமரிக்க பல நன்கொடையாளர்கள் அனுமதி கோரினர். அதன்படி கடந்த ஆண்டு மாநகராட்சிப் பகுதிகளில் 103 எண்ணிக்கையுள்ள பஸ் செல்டர்கள் அமைக்க பல்வேறு தனியார் ஸ்பான்சர்தாரர் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் சில பேர் தவிர பெரும்பாலான நன்கொடையாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பஸ் செல்டர்கள் உரிமையாணைக் கட்டணம் அதிகமாக உள்ளதால் அனுமதி பெற்ற பின்னரும் பஸ் செல்டர்கள் அமைக்க இயலாமல் உள்ளனர். பஸ் செல்டர்கள்அமைக்க செலவிடும தொகையினை ஒப்பிடும் போது உரிமக்கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணம் போன்றவைகள் அதிகமாக உள்ளதால் பஸ் செல்டர் அமைக்க யாரும் முன் வருவதில்லை. மேற்படி கட்டணங்களை ரத்து செய்தால் மாநகரில் உள்ள அனைத்து பஸ் செல்டர்களையும் தமது சொந்த செலவில் செய்து பராமரிக்க பல தனியார் நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளனர்.

எனவே, பஸ் செல்டர்களையும் அமைக்க வசூலிக்கப்படும் வருடாந்திர உரிமையாணைக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணம் போன்றவைகளை ரத்து செய்வது குறித்து மாநகர மன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - மாமன்றம் ரத்து செய்யலாம் ந.க.எண்.177741/06/MH 5.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 242 நாள்.29.12.2006</u>**

**பஸ் செல்டர்கள் அமைக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வருடாந்திர உரிமையானைக் கட்டணம் மற்றும் விண்ணப்ப கட்டணம் ஆகியவற்றை ரத்து செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 43</u>**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 5 வார்டு எண் 70 க்குட்பட்ட தரணி நகரில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு மதிப்பீடு -ரூ. 22,50,000/- ற்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

தரணி நகர் மிகவும் தாழ்வான பகுதியாகும் சதுர்வேதி நகர் இராயப்பா நகர் மற்றும் தெய்வநாயகி நகர் பகுதிகளில் உள்ள மழைநீரும் தரணி நகரைத் தான் சென்றடைகிறது. இதனால் மழைக் காலங்களில் தண்ணீர் வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. தண்ணீர் சாலையில் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இது சுகாதார சீர் கேட்டை விளைவிக்கிறது. மேலும் மழைக் காலங்களில் தேங்கி நிற்கின்ற தண்ணீரை மாநகராட்சியின் பம்பின் உதவியுடன் இரவு பகலாக அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. தரணி நகர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஆகும். அரசாணை எண். 59. நி.(ம) கு.வ துறை நாள் 25-07-2006 ன் முறைப்படுத்தும் திட்டத்தின் படி அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கலாம் என்ற அடிப்படையிலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஆய்வின் போது அவர் அளித்த அறிவுரையின் படியும் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படியும் தரணி நகருக்கு மழைநீர் வடிகால் கட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து -ரூ. 22,50,000/- ற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண்.11731/06/டி.1.வ**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 243 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 44</u>**

கோவை மாநகராட்சிக்கென பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் ( JNNURM) நிதி ஆதாரத்தின் கீழ் விரிவான திட்ட மதிப்பீட்டுத் தொகை 2006 -2007 ம் ஆண்டுக்கு ரூ.166.50 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு திட்ட வரைவு மத்திய நகர்புற அமைச்சகத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்/ மெட்ரோ வாட்டர் சென்னை / புதிய திருப்பூர் மேம்பாட்டு குடிநீர் திட்டம் அல்லது உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி ( Global Tender) கோரி திட்டத்தை நிறைவேற்றுதல் போன்ற ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - ஏதேனும் ஒரு துறை அல்லது முறையினை தேர்வு செய்ய **மன்றம் முடிவு செய்யலாம்.**

**ந.க.எண். 9190/02/ ப.வ.எம்.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 244 நாள்.29.12.2006</u>**

**ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் நிதி ஆதாரத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி ( GLOBAL TENDER) கோரி செயல்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 45</u>**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், பிரதான அலுவலக கட்டிடத்தில் லிப்ட் மற்றும் மாடிப்படி கட்டுதல் மேலும் கல்வி பிரிவு அலுவலக கட்டிடத்தையும், பொது பிரிவு அலுவலக கட்டிடத்தையும் முதல் தளத்தில் இணைத்து நடைபாதை அமைக்கும் பணிக்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண். 26666/06/எம்.டி**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 245 நாள்.29.12.2006</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**